மல்லிகை

'MALLIKAI' PROGRESSIVE MONTHLY MAGAZINE

ஆசிரியர்: டொமினிக் ஜீவா



கலை, இலக்கிய மாத இதழ்

அக்டோபர் 1979

1 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இயற்கைச் சூழ்நிலை [illegible]கரியமாக அமைந்த வசதியான அறைகள் கொண்டதும்,

* கடற்கரையில் இயற்கைப் பின்னணியை இயல்பாகக் கொண்டதும்;

* சுகமான படுக்கை வசதிகள், போக்கு வரத்துக்கு வாய்ப்பான சூழ்நிலையைக் கொண்டதும்

ரசனைக்குத் தகுந்த மாதிரியுமான

உள்நாட்டு, வெளிநாட்டு மதுபான வகைகளும்

இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

For A Comfortable Stay

In Jaffna

Amidst Pleasant Surroundings

GRAND HOTEL

FOREIGN LIQUOR AVAILABLE

T'phone : 544

37, BEACH ROAD,
JAFFNA.

137 பதினாந்தாவது ஆண்டு

'Mallikai' Progressive Monthly Magazine

ஒக்டோபர் 79

மல்லிகை

முகவரி: ஆசிரியர் டொமினிக் ஜீவா 234B- கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் இலங்கை.

MALLIKAI
Editor: Dominic Jeeva
234B, K. K. S. Road,
JAFFNA.
Sri Lanka

மல்லிகையில் வெளியாகும் கதைகள், கவிகளில்வரும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே சிந்தனை, கருத்து எல்லாம் ஆக்கியோர் தனித்துவம் பொறுப்பும் அவரே.

"ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி யாதியினைய கலைகளில் - உள்ளம் நடுபட்டென்றும் நடப்பவர் - பிறர் மனநிலை கண்டு துள்ளுவார்"

பாரதி நூற்றாண்டு 80—ல்

பாரதி நூற்றாண்டு 80-ல் வருகிறது.

இலக்கிய நெஞ்சங்கள் சகலரும் அம் மாபெரும் கவிஞனைக் கௌரவிக்கும் முகமாகத் தம்மைத் தாமே இப்போதே தயாரித்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நமது அரசாங்கம் அந்த உலகக் கவிஞனைக் கௌரவிக்கும் முகமாகத் தபால் தலையொன்றை வெளியிட்டுக் கௌரவிக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

தமிழகப் பயணம் தவிர்க்க முடியாததாகி விட்டது. அதனால் இந்த இதழ் வெளிவருவதிலும் சற்றுச் சுணக்கம். மெஷின் சம்பந்தமான நெருக்கடி வேறு. எனவே தாமதத்திற்கு வாசகப் பெருமக்களிடம் மன்னிப்புக் கேட்கின்றோம்.

பட்டுக்கோட்டைக் கவிஞனின் பொன் விழா பிப்ரவரி 80-ல். அந்தக் கவிஞனுக்கு அஞ்சலியாக மல்லிகையும் இதழ் ஒன்றைச் சமர்ப்பிக்க விரும்புகிறது.

இலக்கிய நண்பர்கள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

— ஆசிரியர்

15-வது ஆண்டு மலரில் வெளியான எனது 'பழைய வார்ப்புகள்' கதை தொடர்பாக எழுந்த அசௌகரியங்களுக்காக வருந்துகின்றேன்.

காவலூர் எஸ். ஜெகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

❋ ஜூலை மாதம் வெளிவந்த சிறந்த சிறுகதைக்கான இலக்கியச் சிந்தனைப் பரிசு இலங்கை எழுத்தாளரான திரு. ச. முருகானந்தனுக்குக் கிடைக்கப் பெற்றது. 'தீபம்' இதழில் வெளிவந்த அன்னாரது 'மீன் குஞ்சுகள்' என்ற கதையே அம் மாதத்தில் வெளிவந்த சிறந்த சிறுகதையாகத் தெரிவு செய்யப்பட்டது. அவருக்கு நமது வாழ்த்துக்கள்.

❋ மல்லிகையின் எழுத்தாளர் ராஜ் ஸ்ரீகாந்தன் அவர்களுக்குச் சமீபத்தில் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு மல்லிகையின் வாழ்த்துக்கள்.

❋ இளம் எழுத்தாளரான எஸ். எம். ஜே. பைஸ்தீன் அவர்களுக்கும் ஆகஸ்ட் மாதம் திருமணம் நடைபெற்றது. திருமணத் தம்பதிகளுக்கு மல்லிகையின் வாழ்த்துக்கள் என்றும் உரியது.

❋ மல்லிகையின் நீண்ட கால அபிமானியும் தரமான வாசகியுமான டாக்டர் ராஜம் தேவராஜன், டாக்டர் தேவேந்திரனைத் திருமணம் செய்து கொண்டார். மணமக்களுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

❋ 'தகவம்' நடத்திய ஐந்தாண்டுச் சிறுகதைப் போட்டியில் திரு. கே: ஆர். டேவிட் அவர்களின் கதை சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அவருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

❋ கவிஞர் வில்வரெத்தினம் சமீபத்தில் தமதுஊரான புங்குடுதீவில் திருமணம் செய்து கொண்டார். திருமணத் தம்பதிகளுக்கு நமது மனம் கனிந்த வாழ்த்துக்கள். மணமகள் பிரபல எழுத்தாளர் மு. தளையசிங்கம் அவர்களினது மருமகள் என்பது குறிப்பிடத்தக்கது.

❋ சிங்கள எழுத்தாளர் கே. ஜயதிலகாவின் 'மூன்று பாத்திரங்கள்' நாவலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார் திரு. தம்பிஐயா தேவதாஸ். இந்நூலைச் சென்னை என். சி. பி. எச். நிறுவனம் சமீபத்தில் வெளியிட்டுளது. தமிழகத்தில் பல பிரதேசங்களில் இந் நூல் இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

❋ தமிழ் எழுத்தாளர் பலரின் சிறுகதைகளைச் சிங்களத்தில் மொழி பெயர்த்துள்ளார் திரு. டி. கனகரத்தினம். இது நூலுருவம் பெற்றுள்ளது. மக்கள் எழுத்தாளர் முன்னணியின் முன் முயற்சியின் பேரில் வெளிவந்துள்ள இந்த நூலின் அறிமுக விழா கொழும்பில் 5-11-79 ல் நடைபெறுகின்றது.

❋ மல்லிகையின் பேரபிமானியும் அதன் வளர்ச்சியில் ஆரம்ப காலம் தொட்டு அக்கறை காட்டி வருபவருமான யாழ். சாந்தி பிலிம்ஸ் லிமிட் இ. கந்தசாமி அவர்களுக்கும் செல்வி சரஸ்வதி அவர்களுக்கும் 8-9-79 ல் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. புதுமணத் தம்பதிகளுக்கு மல்லிகையின் நல் வாழ்த்துக்கள் உரியதாகிறது.

மல்லிகை

இந்தியாவில் இடைக் காலத் தேர்தல்

இந்திய நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கின்றது. இது இடைக் காலத் தேர்தல்தான். ஜனவரி 3 - 6 - ந் திகதிகளில் இரு கட்டங்களாக நடைபெற இருக்கும் இந்தத் தேர்தலில் சகல கட்சிகளும் போட்டி போட முன் வந்துள்ளன.

சுதந்திரம் பெற்றதின் பின் அந்த நாடு அரசியல் ஸ்திரத்தன்மையற்று ஓர் இடைக் காலத் தேர்தலை எதிர் நோக்க வேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கின்றது.

ஒரு மாபெரிய நாடு இப்படியான அரசியல் குழறுபடிகளுக்கு உட்பட்டுச் சீரழிந்து கொண்டு போவதை ஜனநாயகத்தை நேசிக்கும் நெஞ்சங்கள் உவகையுடன் பார்த்து ரஸிக்க முடியாதுதான். ஆனால் அந்த நாட்டில் இதுவரை ஆட்சி செய்து வந்துள்ள கட்சிகளின் தவறான அரசியல், பொருளாதார அணுகு முறையினால்தான் இந்தச் சீர்கேடு வந்துள்ளது என்பதைச் சகல மக்களும் இன்று உணர்ந்து வருகின்றனர்.

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் புதிய ஜனதா கட்சி ஆட்சி பீடம் ஏறிய பொழுது நமது தலையங்கத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம். இந்த ஜனதா ஆட்சி நீண்ட நாட்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாது. பல முரண்பாடான கொள்கை உள்ளவர்கள் ஒருங்கிணைந்து ஒரு மாபெரிய நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி உள்ளனர். இவர்கள் காலப் போக்கில் தம்முள் தாமே முரண்பட்டு எதிரும் புதிருமாக நிற்பது திண்ணம். ஆட்சி சீர்குலைந்து போவதற்கு இவர்களே முழு முதற் காரணமாக விளங்குவார்கள் என நாம் தீர்க்க தரிசனமாகவும் திட்டவட்டமாகவும் அந்தத் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

எமது தீர்க்க தரிசனக் கருத்து இன்று நடைமுறை உண்மையாகி விட்டுள்ளது.

அரசியலே அந்த நாட்டில் நாறிப்போய்க் காட்சி தருகிறது.

திட்டங்களும் கொள்கைகளுமில்லாத கட்சிகள் முன்னணி அமைப்பது என்ற பெயரால் ஒன்று சேருகின்றன. நேற்றுவரை படுமட்ட ரகமாகப் பொது மேடைகளில் ஒருவரை ஒருவர் வசை பாடிய கட்சிகள் இன்று அணி சேர்ந்து ஒரே மேடையில் ஒருவர் புகழை மற்றவர் விதந்தோதும் வண்ணம் காட்சி தருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சில கட்சிகள் யாருடன் யார் கூட்டுச் சேருவது என்ற விவஸ்தையே இல்லாமல் 'எல்லாருடனும் கூட்டு' என்ற புதிய அரசியல் தத்துவத்தையே கடைப்பிடிக்கின்றன.

ஒரு நாளைக்கு ஒரு கூட்டென்றால் அடுத்த நாள் வேறொரு கூட்டென்ற கதை அங்கு வெகு சுலபமாகச் சொல்லப்படுகின்றது.

இதற்கு ஓர் அடிப்படைக் காரணமும் உண்டு.

வரக் கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சியுமே அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெறமுடியாத நிலைதான் யதார்த்தமான நிலை. எனவே கூட்டுச் சேர்ந்துதான் ஆட்சிப் பீடத்தில் அமர வேண்டிய கட்டாய சூழ்நிலை. எனவேதான் இந்தக் கூட்டணிச் சேர்க்கை.

இதைப் பார்க்கும் சாதாரண பொதுமக்கள் திகைத்துப் போய் நிற்கின்றனர். என்ன செய்வதென்றே அவர்களுக்குப் புரியவில்லை.

இதில் விசித்திரம் என்னவென்றால் அந்தப் புரியாமல் திகைத்துப் போய் மூக்கைப் பிடித்துக் கொண்டு நிற்கும் அந்தப் பாமர மனிதர்களின் எதிர்காலச் சுபீட்சத்திற்கு வழி சமைக்கத்தான் தாங்கள் தாங்கள் தேர்தலில் போட்டியிடுவதாக ஒவ்வொரு சட்சியும் அறிக்கை மேல் அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றது.

அந்தப் பாமர மக்கள் — உழைக்கும் மக்கள் — இன்றைக்குத் திகைத்துப் போய் நிற்பது உண்மைதான். ஆனால் அவர்கள் செயலற்று நின்று விடவில்லை என்பதும் மற்றொரு உண்மையாகும்.

அவர்களின் செயலூக்கத்தை ஒன்று திரட்டி ஒரு புதிய நவ இந்தியாவைக் கட்டியெழுப்ப முனைந்து செயல்படும் இயக்கங்கள் — கட்சிகள் — இன்று இந்தியாவில் இல்லாமல் இல்லை. அவர்கள் பலம் குறைந்தவர்களாக இன்று இருக்கலாம். ஆனால் அவர்கள் மக்கள் முன் வைக்கும் கருத்துக்கள் — அரசியல் கொள்கைகள் — பலம் குறைந்தவைகள் அல்ல.

ஒரு புதிய இந்தியாவைக் கட்டியெழுப்பும் நவ சிந்தனைகளைக் கொண்ட இந்த இயக்கங்களின் பின்னால் உழைக்கும் கரங்களைக் கொண்ட தொழிலாளிகளும் விவசாயிகளும் புத்திஜீவிகளும் ஒன்று திரளும் காட்சிகளையும் இன்று காணக் கூடியதாக இருக்கின்றது.

உழைக்கும் மக்களின் எதிர்காலச் சுபீட்ச வாழ்வுக்குச் சரியான வழி சமைக்கத் தெரிந்த தத்துவங்களை உள்ளடக்கிய கட்சிகள் சிறு சிறு வேறுபாடுகள் காரணமாக இதுவரை பிரிந்திருந்தன. அரசியல் தேவையும் அனுபவமும் மக்களின் நெருக்குதலும் சேர்ந்து இன்று அவர்களை ஓர் இணக்கத்திற்கு வரத் தூண்டியுள்ளன. இந்த இணக்கம் இந்தியத் தேர்தலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு புதிய நவ இந்தியா உருவாகக் கூடிய பிரசவ வேதனையின் கால கட்டம் இது என்பது எமது அபிப்பிராயமாகும். நாளைய இந்தியாவை இன்று உருவாக்க ஏற்பட்டிருக்கும் இந்த வேதனை ஒரு லிடியலுக்கான ஆரம்பத் துயரமே என்பது நமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

தமிழக அனுபவம்

டொமினிக் ஜீவா

நீண்ட தொடர் கட்டுரை எழுதும் நோக்கம் எனக்கில்லை.

சென்ற ஆண்டு தமிழகத்திற்குப் போனதை விட, இம்முறை பல பிரதேசங்களுக்குக் கூடுதலாகச் செல்லும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

போன பிரதான ஊர்களில் எல்லாம் இலக்கியக் கூட்டங்களை ஒழுங்கு செய்திருந்தனர். அக் கூட்டங்களில் உரையாற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. இலங்கைப் பிரச்சினைகள் பற்றியும் குறிப்பாகக் கலை இலக்கிய ஆக்கங்கள் பற்றியும் வெகுவாக அறிந்து கொள்ள அதிக அக்கறை காட்டினர், கணிசமானவர்கள்.

ரகுநாதன் தலைமையில் கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் வரவேற்புக் கூட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்தனர். லக்ஷ்மி, தீபம் பார்த்தசாரதி, சி. ஏ. பாலன், அறந்தை நாராயணன், வல்லிக்கண்ணன், ராஜ்மோகன் போன்றோர் வரவேற்புப் பேசினர். நானும் பல தகவல்களை அவர்களுக்குக் கூறக் கூடியதசக அமைந்தது.

நாரண துரைக்கண்ணன், ராஜம் கிருஷ்ணன், விஜயபாஸ்கரன், தி. க. சி., சோமு, ரவீந்திரதாஸ், சுப்ரமணியராஜு உட்பட பல எழுத்தாளர்களும் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

திரு: சமுத்திரம் வரவேற்புரை நிகழ்த்தினார். சென்ற ஆண்டு சென்னை வானொலியில் என்னைப் பேட்டி கண்டு ஒலிபரப்பிய செய்தியைப் பாராட்டி, வேறெவருக்கும் வராத வகையில் ஏராளமான கடிதங்கள் சென்னை வானொலி நிலையத்திற்கு வந்ததாக அவர் அதில் குறிப்பிட்டார். அதே அவர்தான் இம் முறையும் வானொலிக்காக என்னைப் பேட்டி கண்டார்.

மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் முத்துச் சண்முகம் தலைமையில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. அதிலும் எனது கருத்துக்களைச் சொன்னேன். அன்று மாலை டாக்டர் நடராஜன் தலைமையில் மதுரை வங்கி ஊழியர் சங்கத்தில் கூட்டமொன்றில் ஏற்பாடாகி இருந்தது. பேராசிரியர் கனகசபாபதி உட்பட ஏராளமான நண்பர்கள் வந்திருந்து சிறப்பித்தனர்.

கோவையிலும் இலக்கியக் கூட்டமொன்று நடைபெற்றது. கவிஞர் செவ்வியன் தலைமையில் புவியுரசு வரவேற்புரை நிகழ்த்த எனது கருத்துக்களையும் சொல்லி வைத்தேன். மேத்தா, சக்திக் கனல் போன்றோர் அக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் வானமாமலையின் தலைமையில் பாளையங்கோட்டையில் 'ஆராய்ச்சி' மன்றத்தில் வரவேற்புக் கூட்டமொன்றை ஆராய்ச்சிக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர். பேசினேன். பல சுவையான இலக்கிய சர்ச்சைகள் நடுச் சாமம்வரை நடைபெற்றன.

'பொன்னீலன்' புத்தக விமர்சனம் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியில் நடைபெற்றது. அதிலும் கலந்து கொண்டேன். மாலை புலவர் சிவசுப்பிரமணியம் இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பொன்னீலன் உட்பட பல இலக்கிய நண்பர்கள் கலந்து கொண்டனர். மிக ஆழமான இலக்கிய சர்ச்சை நடந்தது. ஈழத்தின் இலக்கிய முயற்சிகளை அறிவதில் பலர் விசேஷ அக்கறை காட்டினர்.

அதே வழியாக ராமேஸ்வரம் வந்து சேர்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்கள்

பதினைந்தாவது ஆண்டுகளை நிறைவெய்தி விட்ட மல்லிகை மலர் கண்டு மகிழ்வடைந்தேன். இன்றைய இலக்கிய உலகில் ஒரு சஞ்சிகை பதினைந்து ஆண்டினைப் பூர்த்தி செய்து விட்டதென வெறுமனே பகர்வது பெருமையல்ல.

எவ்வளவோ எதிர்ப்புகளுக்கிடையே, எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலே, தன் அரும் பெரும் உழைப்பு 'இலக்கியத்தின் அயராத சேவையே' எனத் தன்னகத்தே கொண்டு, என்றும் சிறப்புடன் மிளிர்ந்து இன்று பதினைந்தாவது ஆண்டை எட்டிப் பெருஞ் சாதனையுடன், வீறுடன் வெற்றி நடை போடும், மதிப்பால் மிகுந்த மல்லிகைக்கு என் மானசிகமான வாழ்த்துக்கள்

ஆண்டு மலரில் 'எனது ஆத்ம உணர்வு உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுகின்றது' என்ற தலையங்கக் கடிதமே மல்லிகையின் மகிமை பற்றி மங்கிய எண்ணங் கொண்டோர்க்கு விளக்கத்தைக் கொடுத்திருக்கும்.

சிறுகதைகள், கவிதைகள், விமர்சனங்கள், இலக்கியக் கட்டுரைகள் என்பன என் இதயத்தை ஈர்த்த போது என் மனக் கோட்டில் ஒரு சிறு கீறல் விழுந்து விட்டது. காவலூர் எஸ். ஜெகநாதன் அவர்களால் எழுதப்பட்டிருக்கும் 'பழைய வார்ப்புகள்' என்னும் சிறுகதை கடந்த மாதச் சிரித்திரன் இதழில், 'ஜோர்ஜ் சந்திரபாபு' என்னும் புனை பெயருடன் 'காலங்கள் சாவதில்லை' என்னும் தலையங்கந் தாங்கிப் பரிசுப் போட்டிக்கான விமர்சனம் கோரி வெளிவந்திருந்தது. இதே கதை சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்களின் நினைவுச் சிறுகதைப் போட்டியில் 'பட்ட மரங்கள் தளிர்ப்பதில்லை' என்ற தலையங்கத்துடன் முதற் பரிசு பெற்றதாக அறிந்தேன்.

இவ்வாறு புனை பெயர்கள் மூலமாக வேறு பெயர்களில் வெவ்வேறு தலையங்கங்களில் ஒரு சொல் கூட மாறுபடாத வகையில் ஒரே கதையைப் பிரசுரிக்கப் பட்டிருப்பதற்கான காரணத்தை எனக்கு அறியத் தருவீர்களா? இக்கதை சமூகத்தின் மையப் பிரச்சனையான சாதி அமைப்பைச் சாடி, நல்ல கருவூலங்களுடன் தரமான கதையென மதிப்பிடக் கூடியதுதான். ஆனால் இன்றைய ஈழத்தின் பிரபல்யமான எழுத்தாளராக வளர்ந்து கொண்டு வரும் ஆசிரியர் இப்படிச் செய்தது தவறில்லையென்று ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றா?

ஈழத்தின் திங்கள் இதழ்களாக வெளிவரும் சஞ்சிகைகளில் பல்வகைச் சிறப்பும் பொருந்தி, உண்மையான இலக்கியப் பணி புரியும் முதல் தரமான சஞ்சிகையென என் போன்றவர்களால் போற்றப் படும் மல்லிகையில் இத்தகைய முறையில் மறு பதிப்புச் செய்ய நேர்ந்தது மனவருத்தத்தினைத் தருவதாக அமைந்து விட்டது.

சி. எச். பிறேமினி

மல்லிகையின் பதினைந்தாவது ஆண்டுமலர் கண்டு சுவைத்தேன், உள்ளம் திறந்து சொல்கிறேன். எனக்கு மல்லிகையோடு ஒரு பிடிப்பு இருக்கிறது — உடன் பிறந்த பாசம் போல.

ஆண்டு மலரின் தலையங்கக் கடிதம் என்னால் ஐந்து முறைக்கு மேல் படிக்கப்பட்டு விட்டது. சும்மா சொல்லக்கூடாது மிகவும் நுல்லியமான உணர்வுப் பிடிப்போடு எழுதப்பட்டிருக்கிறது.

கதைகள் பற்றி... செம்பியன் செல்வனின் 'சர்ப்பவியூகம்' அருமையான ரஸமான கதை. 'வெறுமையின் தகிப்பில் வயல்வெளி பாலையென நீண்டு கிடந்தது' என்று ஆரம்பமாகிப் போகும் வரிகள் காட்சியை அப்படியே கற்பனைக் கண்முன் இழுத்துவந்து நிறுத்துகின்றன. 'மச்சான் நில்லு..... நேற்று நடந்தது போராட்டமில்லை...' இண்டைக்கு நடக்கப் போறதுதான் போராட்டம்' என்று முடிக்கக் கொண்டு செல்லும் அழகு, வசனம் மயிர்க்கால்களில் ஒருவித உணர்வைப் புகுத்துகிறது.

கமாலின் 'தழும்புகள்' கதையை இரண்டாவது பிரிவுடன் முடித்திருக்கவாம். 'ஹாஜியார் வீட்டுச் சாப்பாடென்றால் சும்மாவா?' இந்த வார்த்தை ஒன்று போதும் கதை சிறப்படைய. தலையங்கத்துக்காகத்தான் கதை எழுதப்பட்டிருக்கிறது. ஏனென்றால் மூன்றாவது பகுதி தலையங்கத்துச்குச் சொந்தமானது. முதலிரண்டு பகுதியையும் வேறு தலைப்பில் எழுதி, பின்பகுதியை வேறு கற்பனை இழைத்துத் 'தழும்புகள்' என்று கொடுத்திருக்கலாம். இந்த வகையில் 'மிகைப்படக் கூறல்' இக்கதையின் குற்றம்.

தெணியானின் — 'கூரை ஒன்றுதான்' மலர்களின் பழைய பல்லவியாகத்தான் எனக்குப் படுகிறது. என்றாலும் அதில் ஒரு புதிய கோடு நெளிகிறது.

கவிதைகளைப் பொறுத்த வரையில்..... ஏ 1, வ. ஐ. ச. ஜெயபாலனின் 'கடற்புறம்' கவிதையாகும்.

தானாய் விடிவெள்ளி
தோன்றுகிற சங்கதிகள்
வானத்தில் மட்டும்தான்
வாழ்வில் இருள் தொடரும்...

ச்சா... எவ்வளவு அழகான வரிகள். முருகையனின் 'வெளிப்பு' சடாட்சரனின் 'உயர்ச்சி' இரண்டும் ஒன்றாகவே இருக்கின்றன. அன்பு முகைதீனின் கவிதை ஒரு விழல். உங்களுக்காக எழுதப்பட்டதோ..... அப்படியென்றால் நீங்கள் அந்தப் பக்கத்தில் ஒரு கடிதம் எழுதியிருக்கலாம். அல்லது அந்தப்பக்கத்தை 'தூண்டிலுக்' காகவாவது பயன்படுத்தி இருக்கலாம்.

'புதுக் கவிதையின் கூர்ப்பு', ஜவஹர்ஷாவின் '70-க்குப் பின் நவீன கவிதை வளர்ச்சி', 'சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் சித்திரக் கதைகளின் பங்கு' இம் மூன்றிலும் பின்னது இரண்டும் முழுமையான கட்டுரைகள். மிக மிகச் சுவையாக இருக்கிறது. ஜவஹர்ஷா பாராட்டப்பட வேண்டியவர். 'புதுக்கவிதையின் கூர்ப்பு' ஜெயராசா சிரமப்பட்டு எழுதியிருக்கிறார் போலும். பாராட்டுக்களைக் கூறுங்கள்.

ச. முருகானந்தனின் 'ஒரு கடிதம்' எனது மனோ நிலையும் தான், மல்லிகையைப் பொறுத்த வரையில், நானும் எழுதியதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆ... சாந்தனின் 'குமிழிகள்' ஊரோடு சேர்ந்த ஒட்டுப் பாசத்தை அப்படியே சித்திரிக்கிறது. மிகவும் சுவையானது.

'சோவியத் முஸ்லீம்களின் வளமான வாழ்வு' பற்றிய கட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையில் நான்காவது பந்தியில் (ஹதீஸ், நபிகள் நாயகத்தின் போதனைகள்) என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அதில் ஷதீஸ் என் பது பிழை. சரியான சொல் 'ஹதீஸ்' என்பதாகும்.

கட்டுரையின் இறுதியில் மசூதியின் தலைவர் கூறிய வார்த் தைகள் அர்த்தமற்றவை. அவர் சரியான முஸ்லிமாக இருந்தால் அப்படிச் சொல்லியிருக்க மாட் டார். மதமல்ல இஸ்லாம் வாழ் வின் சீரிய வழிகாட்டியான ஒரே மார்க்கம் அது. அது அதன் கட்டளைகளை கட்டாயம பேணும் படி மனிதனை வேண்டுகிறது. நம்பிக்கைதான் இஸ்லாத்தின் முதலாவது அடிப்படை. தனது மார்க்கத்திலே நம்பிக்கை இல்லா தவனை இஸ்லாமியன் என்று அழைப்பது எங்கள் வழக்கமல்ல. இஸ்லாம், இஸ்லாம்தான். அதில் எந்த இனத்திற்கும் தொடர்பு கிடையாது, அப்படித் தொடர்பு படுத்தியவன் இஸ்லாமியன் என அழைக்கப்படத் தகுதியற்றவன். அவன் ரஷ்யாவிலென்ன, லண்ட னில், இருந்தாலும்தான் இலங் கையில் இருந்தாலும்தான்.

அஷ்ரப்

ஓட்டமாவடி

மலர் பார்த்தேன். மன நிறைவாக இருந்தது. இத்தனை சிரமப்பட்டு நீங்கள் இந்தச் சஞ் சிகைத் துறையில் தாக்குப்பிடித்து நின்று பிடிப்பதைப் பார்க்கும் போது உங்களது மன வலிமையை என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

பதினைந்து ஆண்டுகள் என் பது சொற்ப காலமல்ல. இத்தனை காலமாக நீங்கள் எத்தனை சிரமப் பட்டிருப்பீர்கள் என எண்ணும் போது மானஸீகமாகவே உங்களை என் மனசில் வணங்குகின்றேன்.

நமது நாட்டில் எத்தனையோ இலக்கியச் சஞ்சிகைகள் தோன்றி யுள்ளன; மறைந்துள்ளன. தோன் றும்போதே ஈழத்து இலக்கிய உலகைத் தாமே புது உத்தார ணம் செய்யப் போவதாகக் கட்டி யம் கூறிக் கொண்டு வெளிவந்த சில இதழ்களையும் இந்தச் சமயத் தில் எண்ணிப் பார்க்கின்றேன். இலக்கியத் துறையில் பேர் அடி பட்ட பல எழுத்தாளர்களும் சஞ் சிகைகளை நடத்தி இருக்கின்றனர்; அநேகமானவர்கள் தோல்வி யையே தழுவியுள்ளனர். அந்த அவர்களுக்குக் கூட அடி மனதில் இப்படியான சஞ்சிகைகளை நடத் தும் சிரமம்பற்றி உணர்வுகள் இருக்கவே செய்யும்.

சுருக்கமாகச் சொன்னால் படைப்பாளிகள் வெறும் வாய்ச் சவடால் கற்பனையாளர்கள் என்றே நான் கருதி வந்திருக்கின் றேன். அவர்களிடம் நிர்வாகத் திறமையே சிறிது கூடக் கிடை யாது என்பது எனது எண்ணம்.

உங்களைப் பற்றி ஒரு சிலர் தான் சரியாகப் புரிந்து கொண் டிருக்கலாம். ஆனால் அந்த ஒரு சிலர் அடிப்படைச் சிரமங்களைப் புரிந்து கொண்டவர்கள். உங்க ளுக்கு ஒருவேளை அவர்களை நேர டியாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அந்தக் கொஞ்சப் பேர் களுக்கு உங்களை நன்கு தெரியும்.

எனவே எந்தச் சந்தர்ப்பத் திலும் சோர்ந்து போகாதீர்கள். நீங்கள் சொந்த வாழ்வுக்காக— மனைவி மக்களுக்குச் சம்பாரித்துக் கொடுப்பதற்காக — உழைக்க வில்லை என்பது பகிரங்க உண்மை. எனவே ஊதுபத்தி போல மணம் பரப்பும் உங்களது சலியாத உழைப்பை மலரில் பார்க்கின் றேன், இப்படியான ஓர் இலக் கிய இதழ் நமது மண்ணில் விளைந்தது என எண்ணுவதே ஒரு பெருமையல்லவா?

எஸ். தவயோகராசா

கொக்குவில்

பொருத்தங்கள்

கோகிலா. மகேந்திரன்

ஒரு கையில் இரண்டு சாத கக் குறிப்புகளும், மறுகையில் வெள்ளிப் பிடிபோட்ட அந்தப் பழைய குடையும் 'சேட்' இல் லாத வெறும் இடையில் மடித் துக் கட்டிய வெள்ளை வேட்டி யும், மடியில் சொருகிய ஐந்து ரூபா நோட்டுமாக விரைந்து நடந்து கொண்டிருந்தார் நட ராசா உபாத்தியாயர். விரதாதி களால் மெலிந்து வெளிறிப் போயிருந்த அந்த உடலைத் தூக் கிக் கொண்டு நடப்பது சிரம மாய் இல்லாவிட்டாலும் கூ., மகளின் விஷயம் இன்னும் நிறை வேறவில்லையே என்ற வேதனை யில் உறைந்து இறுகிப் போயி ருந்த பாரமான மனம் அவரை அழுத்தி, அவரது நடையில் ஒரு சோர்வை ஏற்படுத்தி விட்டி ருந்தது.

சௌமியமான ஒரு காலைப் பொழுது. மரம் நிறைய மஞ் சள் மஞ்சளாய்ப் பூத்துக் குலுங் கும் அந்தப் பெரிய கொன்றை மரத்தடியில். கிழக்கே திரும்பிச் செல்லும் வெள்ள ஒழுங்கையில் இறங்கி நடந்தால், இடது கைப்பக்கத்தில் இரண்டாவது ஓலை வீடுதான் சாத்திரி சிதம் பரியின் வீடு. கனகசபை விதானை யாரின் ஒட்டு வீட்டில் பெரி தாக அலறிக் கொண்டிருக்கும் வானொலியில் பிறந்த நாள் வாழ்த்து இன்னும் முடியவில்லை என்பதிலிருந்து நேரம் இன்னும் காலை 7-15 ஆகவில்லை என் பதை மதித்துக் கொண்ட உபாத்தியாயர் கொஞ்சம் வேகத்தைக் குறைத்துக் கொள் கிறார்.

விடிய நாலு மணிக்குச் சொல்லத் தொடங்கினால் காலை எட்டு மணிவரைதான் சிதம்ப ரிச் சாத்திரியாரின் சாத்திரம் உருப்படியாக இருக்கும். எட்டு மணிக்கு எழுந்து தாக சாந்திக் காக அவர் 'கோப்பரேஷன்' பக்கம் போனால், பிறகு சாத்திரி யாரைப் பிடிக்க முடியாது. அந்த ஊரைச் சுற்றிச் சுற்றி வரும் கை ஒழுங்கையெல்லாம் சுற்றிக் கொண்டு,

'டோய்.....! இந்தச் சிதம் பரிச் சாத்திரி சொல்லி நடக் காத விஷயம் எது என்டு கேக் கிறன்..... இப்ப சொல்லுறன் இந்த வரியம் முழுதும் ஒருதுளி மழையும் பெய்யாது. இருந்து பாருங்கோ எல்லாரும்... இந்த ஒல் சிலோன் இலங்கையில் வேறை எவன் இப்பிடிச் சொல் லுவன்..... இல்லை..... தெரி யாமல்தான் கேக்கிறன்.....'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நாக்குழறக் குழறி வான சாத்திரம் சொல்லிக் கொண்டு ஆங்காங்கே விழுந்து கிடப்பார்.

சாத்திரியாரின் வீட்டுப் படலையை உபாத்தியாயர் அடையும் போது உள்ளே சிதம்பரி சாத்திரம் சொல்லும் கம்பீரமான குரல் ஒரு வித தாள லயத்துடன் வெளியே கேட்கிறது. அதையும் மேவிக்கொண்டு சாத்திரியாரின் கடைக்குட்டிப் பையன் தாயிடம் அடி வாங்கிக் கொண்டு 'வீல்' என்று கதறும் போர்த் தந்திர முறை காதுன் செவிப்பறை மென்சவ்வை இடி போல் தாக்குகிறது. உபாத்தியாயர் படலையை மெதுவாகத் திறந்து உள்ளே சென்று சாத்திரியார் சொல்லுவதை உற்றுக் கேட்கிறார்.

'ஒருதரும் கையாடேல்லை. தென்கிழக்கு மூலையிலை, தென்னை மர நிழலிலை, மண்ணுக்கை மறைஞ்சு போய்க்கிடக்கு. சனி பார்வை இருக்கிறபடியால் பாக்கிறவர் கண்ணை மறைக்கும். கிடைக்கிறதெண்டால் மூண்டு நாள் தவணை தாறன். அதுக்குள்ளை கிடைச்சால் சரி பிறகு கிடைக்காது.....'

ஏதோ தொலைந்து போன நகை சம்பந்தமாய் ஆச்சிக்குட்டி ஆச்சிக்கு நினைத்த காரியம் சொல்லிக் கொண்டிருந்த சாத்திரியார் உபாத்தியாயரைக் கண்டு,

"வாருங்கோ வாத்தியார்! இருங்கோ..... இரண்டு நிமிஷத்திலை வாறன்' என்று உபசரித்து விட்டு நினைத்த காரியத்தைத் தொடருகிறார்.

'வடக்கை பாத்துக் கொண்டிருக்கிற ஒரு வைரவருக்கு கற்பூரம் கொழுத்திப் போட்டுத் தேடுங்கோ..... கிடைக்கும்..... சுத்தமான உடம்போடை, மனத்தோடை கொழுத்த வேணும்; இல்லாட்டிக் கிடையாது'

தொலைந்த பொருள் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி தனது சாத்திரம் பிழைத்துப் போகாதவாறு இரண்டு பக்கமும் வாதிடக்கூடிய முறையில் சாத்திரம் சொல்வதில் சிதம்பரிச் சாத்திரியாருக்கு அவரே சொல்வதுபோல, 'இந்த ஒல் சிலோன் இலங்கையிலை வேறை ஆள் இல்லை'.

ஆச்சிக்குட்டி ஆச்சி விடை பெற்றுச் சென்ற பிறகு, மூன்று வெற்றிலையில் பழம், பாக்கு, ஐந்து ரூபா காசும் வைத்துச் சாத்திரியாருக்கு முன்னால் சப்பாணி கொட்டி அமர்ந்து கொள்கிறார் உபாத்தியாயர். நீண்டு நெளிந்து வளர்ந்திருக்கும் தன் தாடியைத் தடவிக் கொண்டே,

'சாதகத்தோடை வந்திருக்கிறியள், கலியாணப் பொருத்தமோ?' என்று கேட்கிறார் சிதம்பரி.

'உங்களுக்குத் தெரியுந்தானே சாத்திரியார்... என்ரை பிள்ளைக்கு என்ன குறை? படிப்பில்லையோ? வடிவில்லையோ? கேட்டபடி அள்ளிக் கொடுக்கப் பணம் இல்லையோ? என்ன இருந்தும் என்ன சுகம்? ஏழிலை செவ்வாய்க் குற்றம் எண்டு..... ஒரு சாதகமும் பொருந்துதில்லை. பிள்ளைக்கும் இந்த ஐப்பசியோடை முப்பத்திரண்டு வயதாகுது. எத்தினை செருப்புத் தேஞ்சு போச்சுது. வயித்திலை நெருப்பைக் கட்டிக் கொண்டு தானே நானும் அலையிறன்' மேலே தொடர முடியாமல் உபாத்தியாயரின் கண்களில் நீர் கலங்கி இமைகளை நனைக்கிறது, சால்வைத் தலைப்பினால் அதை அவர் தட்டி விடும்போது.

'என்ன செய்யிறது வாத்தியார்? ஏழில் செவ்வாய் எண்டால் கவனமாகத்தானே பாக்க வேண்டி இருக்கு. முன் வீட்டுக் காரரைப் பாக்கேல்லையா! அந்

தப் பிள்ளை பரிமளத்திற்கு உதயச் செவ்வாய் எண்டு எனக்குத் தெரியும். அந்தப் பெடியன் ராசாவோடை லவ்வோ..... இளவோ எண்டு சாதகப் பொருத்தம் பாக்காமல் செய்தினம். என்ன நடந்தது பாத்தியளே!.....'

'என்ன நடந்தது?'

'பிறந்த பிள்ளைக்கு நெடுகலும் வருத்தம்; உதுகளிலை ஒண்டும் இல்லை எண்டு சொல்லேலாது' என்று தன்னிடம் முன் வீட்டுக்காரர் சாத்திரம் கேட்க வராத கோபத்தைப் பொரிந்து தள்ளினார் சாத்திரியார். பிறந்த குழந்தைக்கு வருத்தம் வருவது அசாதாரண நிகழ்ச்சி அல்ல என்பதைப் புரிந்து கொண்ட உபாத்தியாயர், சாத்திரியாரை எதிர்த்துக் கதைக்க விரும்பாதவராய் கலங்கிய தன் மனதைத் தேற்றிக் கொண்டே மீண்டும் தன் விடயத்தைத் தொடர்ந்தார்.

'இந்தப் பெடியன் எல்லா விதத்திலும் நல்ல பெடியன். கொழும்பிலை நல்ல உத்தியோகம்; ஒரு குடி வெறி, மச்சமாமிசம் இல்லை. சிகரெட் ஊதிற பழக்கம் கூட இல்லை. எங்களைப் போலை சாதுவான பிள்ளை. சீதனம் எல்லாம் பேசி ஒழுங்காக்கியாச்சு. பிள்ளை கந்தசுவாமியார் கோயிலுக்குப் போன இடத்திலை கண்டு, தனக்குப் பிடிச்சிருக்கு எண்டும் சொல்லிப் போட்டானும். உருவத்திலும் இரண்டு பேரும் நல்ல சோடி. சாதகம் மாத்திரம் பொருந்திட்டு எண்டால், வாற முதல் நாளுக்கே தாலி கட்டிப் போடலாம்.....'

இரண்டு சாதகங்களையும் வாங்கி ஆறுதலாக ஆராய்ந்தார் சாத்திரியார்.

'மனுஷ கனம்... இது இராக்ஷத கனம்; சரி யோனியைப் பாப்பம். ஆண் பாம்பு, பெண் கீரி. அதுவும் அப்படி ம்..... சிரோரச்சு மற்றது அவிட்டம். அவிட்டம் அதுவும் சிரோரசகு: புருஷ மரணம் ம்..... உஹும்' என்று தனக்குள்ளே ஏதேதோ முனகிக் கொண்டே பொருத்தம் பார்த்த சாத்திரியார் இறுதியாகச் சொன்னார்,

'வாத்தியார் நானும் தெண்டிச்சு உங்களை... 'செய்யுங்கோ வாத்தியார்' எண்டுதான் சொல்லப்பாத்தன். ஆனால் என்ன செய்யிறது? நட்சத்திரப் பொருத்தம், இரச்சுப் பொருத்தம், கணப் பொருத்தம், யோனிப் பொருத்தம் இப்பிடி முக்கியபொருத்தங்களே இல்லை; கிரகநிலையும் பொருந்தேல்லை; உங்களைச் செய்யச் சொல்லிப் போட்டு நாளைக்கு ஒண்டு வந்திட்டால் என்னையெல்லே திட்டுவியள். வாத்தியார் நான் சொல்லுறன்..... கவலைப்படாதேங்கோ, உதை விட்டிட்டு வேறை இடம் பாருங்கோ.....'

உடலின் குருதியெல்லாம் சிதறிக் காட்டாற்று வெள்ளம் போலப் பெருக்கெடுத்து ஓட, அதில் தானே உயிரற்று மிதந்து செல்வது போன்றதொரு பயங்கரப் பிரமை உபாத்தியாயருக்கு ஏற்பட்டது. இதையும் விட்டால் இனி எங்கே மாப்பிள்ளை தேடுவது? வேதனையில் பஞ்சு பஞ்சாக நைந்து பிய்ந்த உள்ளத்துடன் உபாத்தியாயர் புறப்பட ஆயத்தமான போது, படலையில் ஏதோ அரவம் கேட்டுத் திரும்பி நிமிர்ந்து பார்த்தார் அவர்.

அழுத கண்ணும் சிந்திய மூக்கும் ஒரு கையில் எடுக்குப் பிள்ளை மறுகையில் ஒரு சூட்கேசுமாக வந்தாள் ஒரு பெண்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்னுலை அங்கை இருக்கேலாது அம்மா. எந்த நேரமும் அடியும் உதையும். எத்தினை நாள் தாங்கிறது. நான் என்ன மாடோ மிருகமோ?...' என்று விம்மி அழுது பொருமியபடி நிற்பது சாத்திரியாரின் மகள் என்பது உபாத்தியாயருக்குப் புரிய சில விநாடிகள் எடுத்தன. உள்ளே சமையல் அறையில் இருந்த சாத்திரியாரின் பெண் சாதி பதறிக் கொண்டு ஓடி வந்தாள்.

'என்ன மோனை? என்ன நடந்தது?.....' மகளைக் கட்டிக் கொண்டாள் தாய். சாத்திரியாருக்கு அது ஒப்புதலில்லை.

'நீ குடுக்கிற செல்லந்தான் பிழை! திருப்பிவிடு, அடுத்த பஸ்ஸிலை போகட்டும். அடிச்சால் என்ன புருஷன்தானே! எனக்குத் தெரியும். சாதகப்படி அவன் தங்கமான பெடியன். ஒரு முன் கோபம்..... அதுக்கென்ன செய்யிறது'

'ஓமோம்..... பதினுலு பொருத்தமும் சரிவருது எண்டு சொல்லித்தானே செய்து வைச்சனியள். இப்ப என்னை பிள்ளை கண்ணீரும் கம்பலையுமா எப்போதும் ஓடி வருது. அதுக்கு ஒரு ஆறுதல் கூடச் சொல்ல மனமில்லை' எரிந்து விழுந்தாள் சாத்திரியாரின் மனைவி.

'எடியே..... அப்ப என்னை சாத்திரம் பொய் எண்டு சொல்லுறியே! இந்த ஒல் சிலோன் இலங்கையிலை அப்பிடிச் சொன்னவன் இல்லை. நீ சொல்ல வந்திட்டியே' என்று உரத்துக் கத்தித் தும்புக் கட்டை எடுத்துக் கொண்டு மனைவியை நோக்கிப் பாய்ந்தார் சாத்திரியார்.

"வாத்தியாற்றை பிள்ளைக்கு வாற மாப்பிள்ளையைப் பொருத்தமில்லை எண்டு குழப்பிறியள்! நீங்கள் பதினைஞ்சு பொருத்தமும் சரியாப் பாத்துச் செய்த கூங்கலை பிள்ளை இப்பிடி வந்து ஏன் நிக்குதெண்டு கேக்கிறன்' அவள் விடுவதாக இல்லை. உபாத்தியாயர் முன்னிலையில் தன்னை அவமானப்படுத்திவிட்ட ஆவேசத்தில் அவளைத் தும்புக் கட்டையால் விளாசு விளாசென்று விளாசிவிட்டார் சாத்திரியார்.

இந்தக் குழப்பங்களுக்கிடையில் மெதுவாக இடத்தைவிட்டு நழுவினுர் உபாத்தியாயர். சாத்திரியார் பொருத்தமில்லை என்று சொன்ன திருமணத்தைச் செய்வதா? விடுவதா? அல்லது இன்னெரு சாத்திரியாரிடம் கேட்பதா? சாத்திரியார் சரியாகப் பொருத்தம் பார்த்துச் செய்த திருமணமும் நிறைவாக இல்லையே! அவருக்கு எல்லாம் ஒரு வித குழப்பமாயிருந்த அதே நேரத்தில் அந்தக் குழப்பத்தில் ஒரு தெளிவும் தோன்றுவது போல் இருந்தது. முன் வீட்டுப் படலையில் நின்று நடந்ததெல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பரிமளாவின் தந்தை.

வாத்தியார்! என்னை பிள்ளைக்கு நான் பொருத்தம் பாக்கேல்லை. அவள் மனம் விரும்பியபடி செய்து வைச்சன். இப்ப என்ன குறை வந்திட்டுது? அவளை மருமேன் இராசாத்தி மாதிரி வைச்சிருக்கிருர். எல்லாம் பொருந்தி வந்தால் சாதகத்தை மாத்திரம் நம்பிக் கலியாணத்தைக் குழப்பிறது புத்தியில்லை' என்று சொல்வது உபாத்தியாயரிடம் ஏற்பட்டிருந்த தெளிவை மேலும் துலக்கி விடுகிறது.

'சாத்திரியார் நல்ல பொருத்தம் என்று சொன்னவர்' என்று ஒரு பொய்யைச் சொல்லித் திருமணத்தை நடத்திவிடுவது என்ற திடமான முடிவுடன் வெளியேறி விழிப்புடன் நிமிர்ந்து நடக்கிருர் உபாத்தியாயர்.

தமிழ் மரபு நிலைப்பட்ட பெண்மை, பெண் தளைநீக்கம்

(ராஜம் கிருஷ்ணனின் 'வீடு' நாவல் பற்றிய ஒரு விமரிசன நோக்கு)

நார்த்திகேசு சிவத்தம்பி

5

நாவலின் தலைப்பு (வீடு) பலவகைகளில் ஒரு குறியீடாகவே அமைகின்றது. குடும்பம் என்னும் களத்தின் தளமே வீடுதான். சுமங்கலிப் பெண்ணுக்குப் பெயரே வீட்டுக்காரி — மனை / வி — இல்லாள் தான். அத்தகைய வீட்டை விட்டுத் தேவி போகின்ருள் என்ற உள்வீடு மாத்திரமல்ல, தங்கள் வீட்டில் தனக்குரிய உரிமையை நிலைநாட்ட முடியாமலே தேவி செல்கின்ருள் என்பதும் மிக மிக முக்கியமானதாகும். அதாவது வீடு உண்மையான ஒரு வீடாக இல்லாததினுலேயே அவள் வெளியேறுகிருள் என்பதும் புலனுகின்றது.

நாவலைப் பொறுத்தவரையில், தேவி, தாங்கள் இருந்த வீட்டைத் தன்னைக் கேளாது விற்பது தர்ம விரோதமான செயலாகவே கருதுகிருள். துரையிடம் அவள் கூறுபவை முக்கியமானவை.

''என்னம்மா? உனக்கு உடம்பு சரியில்லைப்போலிருக்கே? டாக்டரைப் பார்க்கவேயில்லையா?

துரையின் குரல் அவளுடைய நோக்கைத் திருப்புகிறது. அவனை நேராக நோக்குகையில் சட்டென்று கண்கள் துளும்புகின்றன.

'வீட்டை விற்க நிச்சயம் பண்ணிவிட்டார் அப்பா...'

'அதுக்கா இவ்வளவு வருத்தம்..... முப்பத்தெட்டுக்குக் குறையாம நாற்பதுக்குக் கூடப் போகும்போலிருக்குன்னுர். கொள்ளை லாபம்..... சென்டிமென்ட்ஸ் பாழாப் போறது.....'

ஒரு அடி நிலத்துடன் டமாரென்று சாய்ந்து விடுகிறது. 'இந்த வீட்டை..... ஒவ்வொரு மூலையும் நான் திட்டமிட்டு உருவாக்கினேன்டா..... ... சமையல் ரூம், தோட்டம், தையல் திளாசு மூன்று ரூம்... எனக்குன்னு நினைச்சுத் திட்டமிட்டேன்டா'

'என்னம்மா பைத்தியக்காரத் தனமா இருக்கு? நஷ்டத்துக்கு விக்கிறதுன்னு பிரலாபிக்கணும். இங்கே வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டுப் போறதுன்னு எனக்கு ஒரு முழு நாள் விணுயிட றது. வேறென்ன வசதி இருக்கு. அப்ப என்னமோ கட்டணும் போல தோணித்து. கைப்பணம் ஒரு இன் வெஸ்ட்மென்ட் போல போட்டோம். இப்ப லாபம் தானே வருது? தவிர..... ''இந்தக் குடும்பத்தில் எனக்கு ஒரு அதிகாரமும் இல்லையா? இதை விற்கக் கூடாதுன்னு சொல்ல எனக்கு உரிமை இல்லையா?.....''

'என்னம்மா இது? ஸில்லியாக் கேக்கறே. உரிமை கிரிமைன்னு விமன்ஸ்லிப்'' கொண்டாடினேளோ நேத்து கிளப்பில்.....

கணவனினதும், பிள்ளைகளினதும் இந்த மனேபாவம் (வீட்டையே ஒரு விற்பனைப் பண்டமாகப் பார்க்கும் அந்நியமயப் படுத்தப்பட்ட மனேபாவம்) அவளது வெளி நடப்புக்கு வழி கோலுகிறது. தமிழ் இலக்கியப் பாரம் பரிய வழி நின்று கூறுவதனுல், தேவியின் 'துறவு' க்குக் காரணமே இதுதான். உள்ள உறவிலும் பார்க்கப் பொருளாதார லாபத்தை விதந்து நோக்கும் 'வர்க்க மனப்பான்மையின் வெற்றி' அவளை வீட்டை விட்டு வெளிநடக்கச் செய்கின்றது. வீடு விற்கப்பட்டு விவாகம் நடத்தப் பெற்றதும் தேவி வெளியேறி விடுகிருள். வீடு குறியீடாகின்றது.

6

நீண்ட காலமாகக் குடும்பப் பெண்ணுக வாழ்ந்து வந்த ஒருத்தி தனது கணவனை. அவனது குண நிலைபாடுகள் காரணமாக விட்டு வெளியேறுவது பற்றிய இந் நாவலினை வாசிக்கும் பொழுது இதே பொருள் பற்றி வெளிவந்த உலகப் பிரசித்தமான நாடகமான, இப்சனின் 'ஒரு பொம்மை வீடு' பற்றிய நினைவு ஏற்படுவது தவிர்க்க முடியாததே. ஐரோப்பியக் கலை இலக்கிய அரங்கில் பெண் தலைநீக்க இயக்கத்தின் முதற் குரலென்று கொள்ளப் படும் அந் நாடகத்திற்கும் இந்த நாவலுக்கும் தலையங்கக் குறியீட்டிலேயே ஒரு சிறிய இயைபு காணப்படுவதைக் காணலாம்.

நாவலின் பொருளைப் பொறுத்தவரையில் கோட்பாட்டொருமைப்பாடு காணப்படுகின்றதெனினும் நோரு தேவியாகவே மாட்டாள். இருவரும் தத்தம் பண்பாடுகளின் குடும்ப அமைப்புப் பாரம்பரியங்களின் பிரதிநிதிகளாகவே இயங்குகின்றனர். தேவி நோருவைப் பற்றியறிந்திருப்பாளாயின், முக்கியமாக வீடு விற்பனைப் பிரச்சினை தோன்றியதன் பின்னர், அவள் நோருவைத் தன் இரகசிய இலட்சிய தேவதையாகவே கொண்டாடியிருப்பாள்.

வெறல்மர்:- நான் சந்தோஷத்துடன் உனக்காக இரவும் பகலும் பாடுபடுவேன். வேண்டுமானுல் அதற்காக எந்தக் கஷ்டத்தையும் அநுபவிக்கவும் தயார். ஆனுல் ஒருவன் தன் காதலுக்காகத் தனது கௌரவத்தை விட்டுவிடுவதில்லையே.

நோரு:- பல்லாயிரக் கணக்கான பெண்கள் அப்படிச் செய்துள்ளார்கள்;

தேவியின் நிலைமையே அதுதான். சாமிநாதனே இதைக்கூட உணராதவராக இருக்கிருர். சொந்த மகளின் விவாகம் பற்றிய தீர்மானத்தைப் பெண்பார்க்க வரவிருக்கும் தினத்தன்று காலையே சொல்லுபவர் எப்படியிருப்பார்? சாமிநாதனே.

'தலைமுழுக்காடிவிட்டு நுனி முடிச்சுடன் வெளியிறங்கினுல் அவர் உறுத்துப் பார்ப்பார். ரவிக்கைக் கழுத்து வெட்டு சற்றே இறங்கிவிட்டாளோ அவளைப் பார்வையிலேயே துளைத்துவிடுவார்'

பண்பாட்டின் கள வேறுபாடு இந் நிலைமையை ஏற்படுத்துகிறது;

நோருவைப் பொறுத்தவரையில் அவள் தான் வெறல்மரை விட்டுப் புறப்படுவதற்குச் சொல்லும் காரணம்தான் பண்பாடுகளை ஊடறுத்து நிற்கும் அடிப்படை மனித ஒருமைப்பாட்டைக் காட்டுகின்றது.

வெறல்மர்:- ..... (இப்படிச் சொல்வதன் மூலம்) நீ உன்னுடைய மிகப் புனிதமான கடமைகளுக்குத் துரோகஞ் செய்வதை நீ உணரவில்லையா?

நோரு:- அது என்னவென்று நினைக்கிறீர்கள்.

வெறல்மர்:- உனது கணவனுக்கும் உனது பிள்ளைகளுக்கும் நீ செய்ய வேண்டிய கடமை. உண்மையில் இதை நான் உனக்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லையே.

நோரு:- எனக்கு அதேயளவு புனிதமான இன்னுெரு கடமையொன்றுண்டு.

வெறல்மர்:- மடைத்தனமான கதை! எந்தக் கடமையைச் சொல்கிருய்?

நோரு:- என்னிடத்து எனக்குள்ள கடமை!

தேவியும் தன்பால் தனக்குள்ள கடமையை — மனிதாயதக் கடமையை — நிறைவேற்றுவதற்காகவே வீட்டை விட்டுப் புறப்படுகின்றுள்:

ஆனுல் வெளியேறும் முறைமை, வெளியேறும் பொழுது கூறப்படுபவை, அவை கூறப்படும் முறைமை ஆதியன பண்பாட்டு வேறுபாடுகளுக்கியைய அமைந்துள்ளன. இந்த வேறுபாடுகள் மிக முக்கியமானவை. அவற்றுள் முக்கியமான இரு வேறுபாடுகளை இங்கு எடுத்துக் கூறலாம்.

முதலாவது நோரு தனது தீர்மானத்திற்குத் திடீரெனவே இறங்குகின்றுள்.

நோரு:- ..... (எழுந்து நின்று) அந்தக் கண நேரத்தில் தான் நான் இங்கே ஒரு அந்நியனுடன் எட்டு வருடங்களாக வாழ்ந்துள்ளேன் என்பதும் அவனுக்கு மூன்று பிள்ளைகளைப் பெற்றுள்ளேன் என்பதும் எனக்கு வெளிச்சமாயிற்று.....

ஆனுல் தேவியைப் பொறுத்தவரையில் சாமிநாதனுடன் வாழ்வது சிரமம் என்ற சிந்தனை நாவலின் ஆரம்பத்திலேயே தோன்றி விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. அந்த இயைபின்மை நாவலின் இறுதியில் முற்று முழுதாக வெளிப்படுகின்றது.

இரண்டாவது, நோரூவோ ஒரு மேற்கத்திய பெண்ணின் பண்பாட்டுச் சூழலுக்கிணையத் தனது கருத்தைப் பட்டவர்த்தனமாகக் கணவனுக்கு தெரிவித்து விடுகிறாள். கணவனும் அவள் வெளியேறுவதை விரும்பவில்லை. மேற்சென்று தடுக்கின்றான். அப்படியிருந்தும் நோரூ வெளியேறுகிறாள். 'ஒரு பொம்மை வீடு' எனும் நாடகத்தின் இறுதி மேடைக் குறிப்பு இது:

> ''கீழேயிருந்து, பாரமான ஒரு கதவு சாத்தப்படும் சப்தம் எதிரொலிக்கின்றது''

அப்படிக் கதவு சாத்தப்படுவதைத்தான் மேனாட்டு விமரிசகர் ஒருவர் 'சாத்தப்பட்ட அந்தக் கதவின் சப்தம் ஐரோப்பா முழுவதும் எதிரொலித்தது' என்று கூறினார். 'வீடு' அத்தகைய ஒரு தாக்கத்தைத் தமிழ் நாட்டினுள்தானும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

'ஒரு பொம்மை வீடு' நாடகத்துடன் 'வீடு' நாவலை ஒப்பிடும் பொழுதுதான், 'வீடு' நாவலின் உருவாக்கக் குறைபாடுகள் துல்லியமாகத் தெரிகின்றன. 'ஒரு பொம்மை வீடு' நாடகம்; 'வீடு' நாவல்; இருவேறு வடிவங்கள். அந்த வகையில் தாக்கம் பற்றிய மதிப்பீடுகள் வேறுபட வேண்டியதும் அத்தியாவசியமே. ஆயினும் ராஜம் கிருஷ்ணன் தனது நாவலை நடத்திச் சென்று முடிக்கும் முறைமை பூரணமாக ஒரு தாக்கத்தையேற்படுத்த வில்லை என்பதைக் கூறியே ஆகவேண்டும். தேவியின் பண்பாட்டுச் சூழலில் அவள் தன் முடிவைக் கணவனுக்கு எடுத்துச் சொல்ல முடியாது போனமை எதிர்பார்க்கக் கூடியது தான். தேவியும் மகனிடம் தன் உணர்வுகளை மனந்திறந்து பேசுவதும் உண்மைதான். ஆனால் ராஜம் கிருஷ்ணன் சாமிநாதன் பாத்திரத்தை வார்த்து வளர்த்துக் கொண்ட முறைமையில் ஊறுபாடு காணப்படுகின்றது. தேவியை அச் சமுதாய மட்டத்தில் வாழும் சராசரிப் பெண்ணின் 'மாதிரிப் படிவமாக' உருவாக்கியுள்ள நாவலாசிரியை சாமிநாதன் பாத்திரத்தைச் சித்திரித்துள்ள முறைமை அவரை அத்தகைய கணவன்மாரின் மாதிரிப் படிவமாகக் கொள்ள முடியாத அளவுக்கு சில தனித்துவமான குணரப் பாங்கு உள்ளவராகவே ஆக்கிவிடுகின்றது. சாமிநாதனைச் சராசரி இந்துக் கணவனின் மாதிரிப் படிவமாக வார்த்திருந்தால் இக் குறைபாடு நீங்கியிருக்கும்; ஏனெனில் இந்நாவலை வாசிக்கும் அத்தகைய கணவன்கள்தாம் சாமிநாதனிலிருந்து வேறுபட்டவர்கள் என்று பார்ப்பதிலேயே தமது குற்றங்களுக்குக் கழுவாய் தேடிக்கொள்வர். வாசக உளவியலின் முக்கிய பண்புகளில் இதுவும் ஒன்று.

ராஜம் கிருஷ்ணன் தனது மற்றைய நாவல்களிற் பெரும்பாலானவற்றை மிகுந்த கவனத்துடனேயே எழுதியுள்ளார். இந்நாவலின் கையெழுத்துப் பிரதி கிடைக்குமேல் அது தரும் 'பாடாந்தரத்தரவுகள்' நாவலையும் ஆசிரியையையும் மேலும் விளக்கிக் கொள்ள உதவும்.

'வீடு' நாவலில் பலவிடங்களில் ஆசிரியை, வாழ்க்கை, பாத்திர விளக்கத் தெளிவுக்கான பல குறிப்புக்களைத் தந்துள்ளார்;

சாமிநாதனுடைய அந்நியப்பாடான கொடூரத்துக்குத் தரும் பாவியற் காரணச் சுட்டு, தேவியின் தம்பி ராசுவின் மனைவி ஓடிப் போனது பற்றிய குறிப்பு முதலியன நாவலாசிரியையின் உலக நோக்குச் செம்மையை, வாழ்க்கையை முழுமையாக நோக்குத் திறனை எடுத்துக் காட்டுகின்றன. ஆயினும், 'வீடு' நாவல் இன்னும் சிறிது இறுக்கமாகவே இருந்திருக்கலாம். தமிழ் நாவல்களின் பொதுப்படையான செல்நெறியின் பிரதான பண்பாக எடுத்துக் கூறப்படத்தக்க 'கதை கூறும் பண்பு' 'கதையை நடத்திச் செல்லல்' ஆதியன வீடு நாவலின் இலக்கிய முழுமையை ஓரளவு குறைத்து விடுகின்றதென்றே கொள்ள வேண்டும். நாவலின் பிரதான பொருளை வற்புறுத்துவதற்கேற்ற அருமையான பாத்திரங்களைச் சிருஷ்டித்த நாவலாசிரியை (சுமதி, பரிமளா, நீருசாந்தி முதலியோர்) கதையைத் தானாகவே முகிழ்க்கும் வகையில் எழுதியிருப்பின் நாவலின் உணர்வழுத்தம் இன்னும் அதிகமாகவே இருந்திருக்கும். நாவலின் இறுதிப் பகுதியில் வரும் சிந்தனையோட்டம் திரைப்பட உத்தியைத் தழுவி நிற்கின்றது. ராஜம் கிருஷ்ணன் இந்நாவலின் உரைநடைச் செம்மையையும் கனதியையும் கவனித்திருப்பின் இக்குறை நீங்கியிருக்கும்.

'வீடு' நாவல் பற்றிய ஆய்வு, தமிழ் நாவலிற் சித்திரிக்கப்பட்டுள்ள ஏனைய 'தளை நீங்கிய பெண்கள்' பற்றிய ஒப்பு நோக்குச் சிந்தனையைத் தூண்டுவது இயல்பே. ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' நாவலில் வரும் கங்காவை அத்தகைய ஒரு பாத்திரமாகக் கொள்ளமுடியாது. வழி வழியாக வரும் மரபோட்டத்தினின்றும் தான் பிய்த்தெறியப் பட்டவள் என்ற காரணத்துக்காக அவள் தன் தனித்தன்மையை நிலைநாட்டப் பார்க்கிறாள். ஆங்கில மரபிற் கூறுவதனால் அவள் 'சிலுவைச் சுமை'யுடன் நடமாடும் ஒரு பாத்திரம். அந்தச் சுமையை அவள் தூக்கியெறியச் செய்யும் முயற்சிகள் அவளை மேலும் மேலும் சிக்கல்களில் ஆழ்த்துகின்றன. 'சில நேரங்களில் சில மனிதர்கள்' நாவலின் தொடர்ச்சியான 'கங்கை எங்கே போகிறாள்' நாவலில் தான் கங்கா தனது இறுதி நிம்மதியைப் பெறுகின்றாள். கங்காவின் 'யாத்திரையும்', 'ஜய ஜய சங்கர'த் தொடரும் ஜெயகாந்தன் காப்பிய நெறி நாவலாசிரியராக முகிழ்ப்பதை உணர்த்துகின்றன.

ஜானகிராமனின் 'மரப் பசு' நாவலின் அம்மணி, தளை நீங்கிய ஒரு பெண்ணே; ஆனால் அந்தத் தளைநீக்கம், பெண்மை பெண் நிலை பற்றிய சமூகப் பிரக்ஞையால் வந்ததல்ல. அது அம்மணியின் ஆளுமையமைப்பிற் காணப்பட்ட ஒரு இயைபின்மை குறைபாடு காரணமாகத் தோன்றியது. இதனை நாவலின் ஆரம்பம் முதல் முடிவுவரை காணலாம். அம்மணியின் சிரிப்புப் பற்றி ஆசிரியர் விவரிப்பதை நோக்குதல் வேண்டும். ஆனால் அம்மணியை விளங்கிக் கொள்வதற்கு மரகதத்திடம் அவள் கொண்டிருந்த பாசத்தினை விளங்கிக் கொள்ள வேண்டும். அம்மணி இறுதியில் 'சாலிக் கிராமத்திற்கு மேற்கே ஒரு சின்ன வீட்டில்' பச்சையப்பன், மரகதம், பட்டாபியுடன் செல்வதென எடுக்கும் தீர்மானமானது அவளின் வேட்கையும் பாரம்பரிய நிறைவில்தான் பூரணமாகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஜானகிராமனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திறன் அம்மணியின் சமூக விரோதத் தன்மையைக் குறைத்து அவளை விரும்பத்தக்க ஒரு பாத்திரமாக்கி விடுகின்றது.

ஜானகி ராமனின் அம்மணியுடன் ஒப்பு நோக்கும் பொழுது தான் ராஜம் கிருஷ்ணனின் தேவி மெய்ம்மை நேர்த்தியுடைய ஒரு பாத்திரமென்பது புலனாகின்றது. தமிழ் நாட்டுப் பண்பாட்டுச் சூழலிற் பெண்மை விரும்பும் தளைநீக்கம் எத்தகையது என்பதனைத் தேவியின் கதை எமக்கு நன்கு காட்டுகின்றது.

ஆண்மை இலக்கியமயப்படுத்திய பெண்மைக் கோட்பாட்டை நாவலாசிரியைகளே தமது கோட்பாடாகவும் கொண்டு நாவல்கள் படைக்கும் தமிழ் இலக்கிய உலகில், ராஜம் கிருஷ்ணன் என்ற நாவலாசிரியை, மாறிவரும் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் ஒரு மஞ்சள் குங்குமக்காரி, தான் தனது மஞ்சள் குங்குமத்தையும், ஆத்ம கௌரவத்தையும் இழக்காது வாழுவதற்கு எவ்வெவற்றைக் கோரி நிற்கின்றாள் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

வீடு தமிழின் சிறந்த நாவல்களுள் ஒன்றாக இருக்காமற் போகலாம். ஆனால் ராஜம் கிருஷ்ணன் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் மிக முக்கியமான ஒருவராகிறார். சிறந்த நாவலாசிரியர்கள் எப்பொழுதும் சிறந்த நாவல்களை எழுதி விடுவதில்லை; சிறந்த நாவலொன்றை எழுதிவிடுபவர் எவரும் எப்பொழுதும் சிறந்த நாவலாசிரியராக இருப்பதுமில்லை;

(முற்றும்)



நறுமணத்திற்கு
நுரை வளத்திற்கு
பளிச்சிடும் வெண்மைக்கு

எம்டீஸ் சோப்

எம்டீ ஏஜன்சி, தொழிற்பேட்டை: அச்சுவேலி

இலக்கிய வரலாற்றுப் போக்குகள்

சில குறிப்புக்கள்

எஸ். கலாபரமேஸ்வரன்

ஒரு நாட்டினத்தின் செழுமையான கலாச்சாரக் கூறான இலக்கியமானது அதன் தோற்றக் காலத்திலிருந்து காலந்தோறும் பெற்று வந்த வளர்ச்சியையும் அரசியல் சமூக இயக்கங்களின் தாக்கங்களினால் அதன் இலக்கியப் போக்குகளும் மரபுக் கூறுகளும் மாற்றம் பெற்றுச் செல்கின்ற பாங்கினையும் விளக்குகிற இலக்கிய வரலாற்றுத் துறையானது 'தமிழ் கூறு நல்லுலகை'ப் பொறுத்தவரையாயினும்சரி, ஈழத்தைப் பொறுத்தவரையாயினும் சரி இன்னமும் செவ்வையாக ஆய்வு செய்யப்படாத ஒரு துறையாகவே இருந்து வருகின்றது: திறனாய்வுத் துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட இத்துறை ஒரு 'கல்லூரிப் பாட நெறி' என்ற மட்டத்தினைத் தாண்டி ஒரு ஆய்வு நெறி என்ற நிலையை எந்த அளவு அடைந்திருக்கின்றது என்பது தனி ஆய்விற்குரியது: இது தொடர்பாக சில குறிப்புக்களைத் தரும் நோக்கினது இக் கட்டுரை. வெறும் புலவர் வரலாறுகளாகவும் புனைந்துரைகளாகவும் இருந்த எமது வரலாற்று முறைமை, 19-ம் நடுக்கூற்றில் மேலைத்தேய நாகரிகத் தாக்குதலின் மறுவினைவாக ஏற்பட்ட தமிழ் இலக்கியப் புத்துயிர்ப்பு இயக்கத்தின் வழி, ஆங்கிலக் கல்வியின் செல்வாக்குக்குட்பட்ட இலக்கியகர்த்தாக்கள் தமிழ் இலக்கிய பாரம்பரியத்தை ஆயும் வகையில் நூல்களைத் தேடிப் பதிப்பிக்க ஆரம்பித்தமையுடன் ஒரு புதுத் திருப்பம் பெற்றது. இவர்களிற் பலர் பழைய இலக்கியங்கள், ஆசிரியர் பற்றிய செய்திகளைத் திரட்டியும் வெளியிடும் பணி புரியத் தொடங்கியமையுடன் இன்றைய இலக்கிய வரலாற்றுத் துறைக்குக் கால் கோள் இடப்பட்டது. இம் முன்னோடிகள் கொடுத்த ஆரம்பம், அடுத்த கட்டத்தில் தமிழ் இலக்கியத் தொன்மையையும் மரபையும் நிலைநாட்டும் வகையிலான 'அபிமான ஆய்வாளர்'களைத் தோற்றுவித்து, அதன் வழி சிறிது சிறிதாகத் திருந்திய ஆய்வு நெறிகளுமாக வரலாற்றினால் இலக்கியத்தையும், இலக்கியத்தினால் வரலாற்றையும் காலவரன் முறைப்படுத்த முனைந்த ஆய்வாளர்களையும் உருவாக்கியது. ஏழு அல்லது எட்டு தசாப்தங்களின் இப்படி முறை வளர்ச்சியினால் 1924-ல் முதலாவது தமிழ் இலக்கிய வரலாறு வெளிவந்தது. அன்றிலிருந்து நாற்பதுகளின் நடுப்பகுதி வரை சீரான வரலாற்று உள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளடக்கமோ திட்டமான கால வரன்முறையோ, முறையான கால உணர்வோ, பகுப்பு முறையோ இன்றி பல வரலாற்று நூல்கள் எழுதப்பட்டன. இத்தகைய இலக்கிய வரலாற்றுப் போக்கினை ஒரு செல்வியபாதையிலிட்ட பெருமை பேராசிரியர் வையாபுரிப்பிள்ளைக்கே உரியது. பல இலக்கிய ஆசிரியர்களின் காலம் பற்றிய மயங்கங்களைப் போக்கடித்து, தெளிவான காலப்பகுப்பை வகுத்து ஒரு புதிய அணுகுமுறைக்கு வையாபுரிப்பிள்ளை அடிகோலிய போதும், அவரால் ஒரு முழுமையானதும் சீரானதுமான இலக்கிய வரலாற்று நூலை வெளியிட முடியாமற் போனது.

இந்நிலையில் இன்றுவரை நூற்றுக்கணக்கினை அண்மிக்குமளவு வரலாற்று நூல்கள் வெளிவந்து விட்டன. இத்தனை நூல்களின் முக்கிய போக்குக்களை நான்கு வகைகளாகப் பகுத்து. சில மதிப்பீட்டுக் குறிப்புக்களைத் தரலாம் போலத் தெரிகின்றது:

1. இலக்கிய ஆசிரியர் நூல்களைப் பற்றிய காலங்களை நிலை நிறுத்தலே முக்கியமாகக் கொண்ட நூல்கள்.
2. ஆசிரியர் வரலாறுகளையும் நூல் உள்ளடக்கங்களையும் சாதாரணமாகவும் நயப்புரீதியிலும் கூறிச் செல்லும் நூல்கள்.
3. காலச் சூழ்நிலை, அரசியல் சமூக மாற்றங்களின் பின்னணியில் இலக்கியப் போக்குகளை வளர்ச்சிக் கிரமத்தில் விமர்சனஞ் செய்யும் நூல்.
4. அவ்வக்கால சமூக அரசியல் இயக்கங்களின் வெளிப்பாடாக இலக்கிய முறைமைகளை ஆயும் நூல்கள்.

தமிழகத்தின் முதற்தர அறிஞர்களாகக் கொள்ளப்படுவோரும், பிரபல பேராசிரியர்களும் முதலிருவகைப் பகுப்பிலடங்கும் தன்மைத்தான நூல்களைப் படைத்தோரேயாவர். தமிழ் இலக்கிய வரலாறுகளின் வளர்ச்சி நிலையின் ஒரு கால கட்டத்தில், காலங்களை நிலை நிறுத்தும் நூல்களே மிக அவசியமாக இருந்தமை உண்மையே. கர்ண பரம்பரைக் கதைகளின் ஆதிக்கமும், தமிழ் மரபின் தொன்மையை நிலை நிறுத்தும் முனைப்பும், இலக்கியம் பற்றிய வரலாற்றுச் சான்றுதாரங்களின் போதாமையும், புலவர்களின் பெயர் மயக்கங்களும், தமது கருத்தை நிலைநிறுத்தும் முனைப்பும் இதற்கு முக்கிய காரணங்களாக இருந்த போதும் கால ஆய்வில் கூடுதலாகவே நம்மவர் காலத்தைக் கழித்துள்ளனர். கம்பராமாயணம் சோழப் பேரரசு காலத்துப் பெருங் காப்பியம் என்பதனை எல்லோரும் ஏற்றுக் கொண்டாலும் கூட, அதன் சீரினை இக்காலப் பின்னணியில் ஆய்வதனை விடுத்து, அக்காவியம் 885-ல் தோன்றியதா அல்லது 1085-ல் தோன்றியதா எனப் பல வாதப் பிரதிவாதங்களை இந்த இலக்கிய ஜாம்பவான்கள் நடாத்தியுள்ளனர்.

ஐம்பதுகளின் இறுதியளவில் காலப் பிரச்சினை பொதுவில் ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய ஒரு நிலைக்குக் கொண்டுவரப் பட்டபோதும் கூட, அறுபதுகளிலும் அத்தன்மைத்தான நூல்களும், வெறுமனே நூலாசிரியர் வரலாறுகளையும் நூல் உள்ள பக்கங்களையும் தமக்குக் கைவந்த பாணியில் எழுதிச் செல்கின்ற வரலாற்று நூல்களுமே பெருவரவாயின. சில 'பேராசிரியர்கள்' ஒருமைப் பாடற்ற வகையில் சிலகாலப் பிரிவுகளைப் பற்றி நூற்றுக் கணக்கான பக்கங்களில் 'விளாசி' விட்டு தற்காலத்தைச் சிறிது அண்மிக்கத் தொடங்கியவுடன் ஒரு சில பக்கங்களில் ஆசிரியர்கள் பெயர்களை மட்டும் சுட்டிச் செல்வதுமுண்டு.

தெ. பொ. மீ. அவர்கள் 1963-ல் வெளியிட்ட இலக்கிய வரலாறும், மு. வ. அவர்கள் 197 -ல் எழுதிய இலக்கிய வரலாறும் எவ்வகையிலும் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யாதவை என்றே சொல்ல வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சீரிய கருத்துக்களைக் கொண்டிருக்கும் தெ. பொ. மீயின் நூல் இலக்கிய மரபை ஓரளவு நன்கு பகுப்பாய்வு செய்தபோதும் காலப் பின்னணியில் இலக்கிய மரபின் உள்ளார்ந்த வளர்ச்சிப் போக்கைச் சுட்டவில்லை; கட்டுரைப் பாங்கானதாகவும் அமைந்து விட்டது.

400 பக்கங்களில் அமைந்த மு. வ. வின் நூல் வெறும் நூல் | ஆசிரியர் விவரணமும் நயப்பு முறைத்தன்மையும் கொண்டதன்றி எவ்வகையிலும் வரலாற்று அம்சம் கொண்டதல்ல என்று அடித்துக் கூறலாம். 'காலந்தோறும் தோன்றிய எல்லா நூலாசிரியருடைய பெயர்களைக் குறிப்பிடவோ எல்லா நூல்களையும் பற்றிய விளக்கங்களையோ தரமுடியவில்லையே' என முன்னுரையில் கவல்கின்ற ஆசிரியர், இலக்கிய வரலாற்றுசிரியன் ஒருவனுடைய கடமையைச் செவ்வையாக உணர்ந்திருந்தாரோ என ஐயுறத் தோன்றுகின்றது. இலக்கிய வரலாற்றில் வெறும் தரவுகளுக்கு உண்மையிலேயே இடமில்லை. நூல்களையும் இலக்கியங்களையும் பேதப்படுத்தும் ஆற்றல் மிக்க ஒரு வரலாற்றுசிரியனுக்கு நூற் பட்டியலின் நீட்சி பற்றியோ ஆசிரியர்களின் தகுதிப்பாடு தொடர்பான இடர்பாடு பற்றியோ அச்சம் தோன்ற இடமே இல்லை' என்ற பொருள்பட ரெனிவெலாக் என்ற திறனாய்வாளர் ஒருதடவை எழுதியமை இங்கு மனங்கொள்ளத் தக்கது.

எனவே, இலக்கிய வரலாற்றுசிரியனுக்கு தெளிவான இலக்கியக் கொள்கைகளும், திறனாய்வு நோக்கும், வரலாற்றுணர்வும் மிக இன்றியமையாதவையாம். 1868-ல் ஆங்கில இலக்கிய வரலாறு என்ற நூலை எழுதிய 'ரெயின்' ஆசிரியர் இலக்கிய வரலாற்று ஆசிரியனுக்கு மிக அவசியமான கூறுகளாகப் பின்வருவனவற்றைக் குறித்தார். ( ) இலக்கியம் எழுந்த வரலாற்றுச் சூழ்நிலை; (2) சமூக அரசியற் பின்னணி. (3) காலச்சிந்தனைப் போக்கு. (4) இலக்கியப் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்திய பிற சக்திகள். (5) ஆசிரியனுடைய வாழ்க்கைப் பின்னணி. இக்கருத்தின் மூலம் ஒரு புதிய அணுகுமுறையினை— சமூக அடிப்படையிலான வரலாற்று அணுகுமுறையே ஆங்கில இலக்கிய உலகில் அறிமுகப்படுத்தினர். இச்சிந்தனைப் போக்குடன் இணங்கண்டு கொள்ளக்கூடிய ஒரு அணுகுமுறையை அமெரிக்க இலக்கிய உலகில் முதன் முதல் பரிங்டன் என்பவர் 1927-ல் கையாண்டார்.

தமிழ் இலக்கிய உலகில் இச்சிந்தனையின் தாக்கம் முதன் முதல் வையாபுரிப்பிள்ளையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தில் 1947 அளவில் தென்பட்டது:

> .....காலந் தோறும் மாறுபட்டு வரும் சமுதாயத்தி தன்மையை அவ்வக் காலத்துத் தோன்றிய இலக்கியங்கள் காட்டவல்லன. சமுதாயமும் இலக்கியமும் ஒன்றையொன்று தாக்கிப் புதுப்பயன் விளைவித்தலும் உண்டு. இப்படி உள்ள தொடர்பினை நன்குணர்ந்தோராயின், நாட்டின் சரித்திரமும், இலக்கிய சரித்திரமும் பெரிதும் விளக்கம் எய்தும்'

இம் முறையினை முழுமையாகக் கையாண்டு அன்னார், ஓர் இலக்கிய வரலாறு படைக்க முடியாமற் போயினும் அக் குறையை ஓரளவு நிவிர்த்தி செய்தவர் ஈழத்துப் பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள்: 1951-ல் முதன் முதல் சுருக்க வரலாறாக வெளியிட்டு, பின் விரிவாக்கப்பட்ட இந்நூல் இன்றும் இத்துறையில் சிறந்த நூலாகக் கொள்ளப்படத்தக்கது என்பர் ஜேசுதாசன். எஸ். இராமகிருஷ்ணன், ஆ. வேலுப்பிள்ளை இருவரும் ஓரளவு அத்தகைய அணுகுமுறையைக் கொண்டவர்கள்.

ஜேசுதாசன், கமில் சுவெலபில் இருவரும் கூடிய அளவு அவ்வக்காலங்களையொட்டி இலக்கியப் போக்கினை ஆய்ந்து மனப்பதிவு முறையிலும் பிறவகையிலும் இலக்கியங்களை மதிப்பீடு செய்யும் போக்கினராக விளங்குகின்றனர்.

கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர் மார்க்சிய விமரிசன முறையைச் சிறப்பாகக் கையாண்டு சில இலக்கியக் காலப்பகுதிகள், வடிவங்கள் தொடர்பாக ஆய்வுகளை நடாத்தியுள்ளனர்.

சட்டத் துறையிலிருந்து தமிழ் இலக்கிய உலகிற் புகுந்த கா. சுப்பிரமணியபிள்ளை, சோமசுந்தர பாரதியார் போன்றோரோ அல்லது பிற மொழி பேசுவோருக்கு தமிழ் இலக்கியப் பாங்கினை எடுத்துக் கூறும் பெருநிலையில் வைக்கப்பட்ட தெ. பொ: மீ:, மு. வ. போன்றோரோ செவ்வையான ஒரு இலக்கிய வரலாற்று நூலைத் தமிழுலகிற்கு அளிக்க முடியவில்லை. முன்னேறிய அணுகுமுறைகளைக் கையாண்டு தமிழ் இலக்கிய வரலாற்றினை எழுதியோரை விரல்விட்டுக் கூற முடியும்.

இந்நிலையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற பெரும் கல்வி நிறுவனங்கள் அறுபதுகளில் வெளியிட்ட இலக்கிய வரலாற்று நூல்களை மதிப்பீடு செய்யும் போது அவற்றுள் எவையும் எமது ஆய்வுத் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை என்ற உண்மை இப்போது உணரப்பட்டு வருகின்றது.

ஈழத்து இலக்கிய வரலாற்று நிலைமை இன்னமும் ஆரம்பத்திலேயே இருக்கின்றது. சில காலப் பிரிவுகள் குறித்து நல்ல சில நூல்கள் வெளிவந்த போதும் திட்டமாக நூல் எழுதும் முயற்சிகள் இதுவரைக்கும் தொடங்கப்படவில்லை.

தெளிந்த இலக்கியப் பார்வையும், வரலாற்று உணர்வும் மிக்க இலக்கிய ஆசிரியர்களுடைய கூட்டு முயற்சியிலே கூட சிறந்த இலக்கிய வரலாறுகள் தோன்றியிருக்கின்றன என்பதற்குப் பல வெளிநாட்டு உதாரணங்கள் இருக்கின்றன. ❖

பின்னுக்குப் பார்க்கிறார்

சி- சுதந்திரராஜா

சுத்தமான பஸ். புத்தம் புதிய சிவந்த ரெக்ஸீன் குஷன் ஆசனங்கள். மொச்சை மணமடிக்கிற கம்பிப் பூச்சு. எகலவேர்க்ஷொப்பிலிருந்து அப்போதுதான் வெள்ளோட்டம் போட்டுக் காண்பித்தபடி நிற்கிறது.

நீளமான மூன்று கம்பிக் குத்து மடிப்பில் நாலரை பஸ் நிரம்பக்கூடிய கியூ. அத்தனை பேரையும் விழுங்கி ஒரேயடி ஏப்பம் விடுகிற தோரணையில் இந்தப் புது பஸ். பிரயாணிகள் ஒழுங்காகக் கியூவில் நின்று வராமல் உள்ளே தொற்றிவிட முடியாதபடி பழைய பீப்பாவைக் கூடக் குறுக்காக வைத்திருந்தார்கள். புதுக் குழந்தையாகப் பளபளப்புப் பண்ணிய வெள்ளித் தகரக் கூடு மூளித்தனமான சேஸிக்கு ஒரு வகையில் மூலாம் பூசி அழகூட்டியது: மறைவின் ஸீற்றுக்குப் பின்னால் இருந்த கம்பியும் தகரமுமான உயர மறைப்பில் ஒரு வட்ட வடிவமான பளிங்குக் கண்ணாடி முழு பஸ்ஸையுமே தனக்குள் அடக்கிக் கொண்டிருந்தது. அதனோடு — புகைத்தல் விலக்கப்பட்டுள்ளது பொறிக்கப்பட்ட தகரம். ஒரு சில விநாடியில் டகடகவென அந்தப் புதுபஸ் பஞ்சடைந்த, மெத்தையாகிப் பிதுங்கிப் பெருகி வழியலாயிற்று.

விறுக் விறுக்கென செருப்புத் தேய நடந்து வந்த வீச்சோடு, பருத்திருந்த அந்தப் 'போலினை' கிஞ்சித்தேனும் ஏறெடுத்தும் பார்க்காத தோரணையோடு பன்யாஸி தேரோ படீரெனப் படிகளில் ஏறினார்; கொண்டக்டரோ வலிய அவரை நாடிப் பயபக்தியோடு ரிக்கற்றைக் கொடுத்தான். அவருக்கு முதல் ஆசனத்திலிருந்தவன் எழுந்து இடம் கொடுத்துச் சிரித்தான்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்திலே பௌத்த நாகரிக விரிவுரையாளரே நம்முடைய பன்யாஸி தேரோ: பல ஆண்டுகளுக்கு முன்னிருந்த தேஜஸ் இன்றுவரை அவருடைய முகத்தில் இருக்கிறது. அவருடைய பார்வை அந்த றைவரின் ஸீற்றுக்குப் பின்னால் முழு பஸ்ஸையுமே உள்ளடக்கிய வட்ட வடிவமான கண்ணாடியிலேயே நிலைக்காலனது.

பின் வாசலில் லொட லொடவென ஒலியெழுப்பிச் சனம் ஏறிய நிலை மாறி புட்போட்டில் ஒலி கிளம்பி வரவே முடியாத பாரத்தின் அமுக்க நிலை உருவானது. ஒருவரை ஒருவர் நெருக்கியபடி முன்னுக்கு வருவதைக் கண்ணாடியிலே பார்த்தபடி ஆழச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் பன்யாஸி.

விரிசடையாகித் தெரிந்தாள். ஒரே வீச்சில் நூறு வீதம் வெற்றி காட்டும் கவர்ச்சி: அந்த விரிசடைக்காரிக்குப் பின்னால் ஒட்டியபடி ஒரு கறுப்புக் கண்ணாடியிட்ட ரோமியோ:

பன்யாஸியின் இதயத்திலே ஒரு காலத்திலிருந்த பிஸோ கூட இவள் சாயலில் தானிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள். ஒழுங்காக வகிடு எடுத்து வாரிவிட்ட தலை. லவண்டர் கிறீம் பூசாத இயல்பான கிராம அழகு: அவளேதான் அவரை இப்படிப் பித்தனான பிக்குவாக்கிவிட்டு ஒய்ந்து ஒழிந்தவள்; பிஸோ பன்யாஸியின் மெல்லிய உணர்வுகளை எப்படியெப்படி எல்லாமோ கிளர்ந்தெழ வைத்துப் பழகினாள். சிலிர்த்துக் குளிர உந்திய அதே கணத்தில் கொள்ளிக் கட்டை கொண்டு அவரது இதயத்தைப் பொசுக்கிக் தகனமாக்கியும் விட்டவள்.

ஆனாலும் இன்று விரக்தியால் வாய்த்து விட்ட மொட்டைத் தலையைத் தாமே தடவித் தன்னை ஆசுவாசப் படுத்தினார். 'ஆவாஸ்'ஸில் விட்டு விட்டு வந்ததால் அவருடைய அந்த விசிறி கூட வியர்வையைப் போக்க உதவுவதாயில்லை.

பிஸோ — அவரது காதலி — மாரடைப்பு வந்து மாண்டு போனாளா? அப்படிப் போயிருந்தால் கூட அவர் இப்படி பஞ்ச சீலத்தைப் போர்த்துக் கொண்டிருப்பாரா? பின் பெற்றோர்கள் காதலை எதிர்த்தார்களா? அப்படியும் இருந்தால் பன்யாஸி ஒரு கிளர்ச்சி வீரராகவே மிளிர்ந்திருப்பார். அவளோ—

எத்தனை கற்பனைக் கோபுரங்களை எழுப்பி உசுப்பி ஆட்டினாள்? ஒவ்வொரு ஆணின் ஆற்றலுக்கும் பின்னாள் பெண்ணே மறைந்திருப்பதை எப்படியெல்லாம் உணர்த்தாமல் உணர்த்தினாள்?

சோகம் பன்யாஸி தேரோவைக் கவ்வி இதயத்தைப் பொருமச் செய்தது. இனிய பசுமையான நினைவுகளோ அவரை விட்டு நீங்காதிருந்தது.

திடீரென பிஸோ ஒரு பண்க்காரனோடு ஓடிவிட்டாள். ஏன் அப்படிச் செய்தாள்? பணத் தாசையிலா? அன்றிலிருந்து பன்யாஸி தேரோவுக்கு மூளை அடங்கிலும் நரக வேதனை.

"மேஹேங்... கொடவன்ன"

கொண்டக்டர் அந்த பஸ் தரிப்பில் இறங்கி நின்று யன்னலூடு ஆட்களை ஒழுங்கு செய்து நெருக்கடியை நிவர்த்தி பண்ணினார். வட்டக் கண்ணாடியில் நிலைத்திருந்த பன்யாஸியின் நிலைத்த பார்வை இம்மியும் மாறவில்லை. முன்னுக்கு ஒருத்தி வருவதும் தெரிந்தது. பன்யாஸி தேரோவின் நரம்பு அறுவது போலிருந்தது. பிஸோ. அவளேதான். கண்கள் நம்ப மறுக்கலாம். பிரமைதான் என பன்யாஸியர் நினைக்கலாம். ஆனால் நிற்பது அவரது உள்ளங்கவர்கள்ளியே.

அன்றிருந்த தேஜஸ் இன்றிருந்ததன் இடமோ தெரியவில்லை. இடுப்பின் ஓரத்தில் குழந்தை கையில் இன்னொரு குழந்தை! வயிற்றில் வேறொன்று! பெருங்காயம் இட்டு வைத்த டப்பா மாதிரி; அடிமேலகே; மாறிப் போயிருந்தாள். ஆனால், பன்யாஸி தேரோவின் தேஜஸ் அப்படியே இருக்கின்றது. யாக்கை நிலையாமை — நிர்வாணம் மறுபிறப்பு — எல்லாம் சக்கரமாகிப் பன்யாஸி தேரோவின் சிந்தனையில் சுழன்றடித்தன. நிமிர்ந்து இருந்தார்.

பன்யாஸி தேரோ இப்போது பின்னுக்குப் பார்க்கிறாரில்லை. முன்னுக்கே பார்க்கிறார்.

❋

அடிடா படலையில.....

பாண்டியூரன்

வடிவேலன் கோயில் வயல்தின்னிப்
போடிப் பொடியன்
உழைக்கும் புலந்திரனைப் பார்த்து
படிப்பது தே வாரம்
இடிப்பது கோ வில் என் (று)
அடிக்கடி சொல்வான்
அடிடா படலையில.....!

கோவில் வயல்களைக்
குத்தகை கொள்ளுவதும்,
வாயிலே மண்ணை
வறியோர்க்குப் போடுவதும்
கைவந்த வீரன்!
கதிர்காமச் 'சீசனிலே'
மெய்யன்பன்;
காவி — கமண்டல — ருத்திராச்ச
மாலை தரித்து.....
வழியிலே தானமிட்டு.....
காலைமுதல் மாலைவரை
கால் நடையாய்ச் செல்வான்;
முருகன் அறிவான் முதலைகளை!
அற்ப பெருமைக்குச் சான்றாய்,
பிறர்க்கமுது ஆண்டிலொரு நாளில்
கொடுத்தும், நார் உரித்தும்,
ஏழைகளை வாழ்விலே தின்னும்
வரட்டுக் கவுரவர்!
வேட்டிக்குள் மேதை, விமர்சிப்பில் சுக்கிரன்!
ஆடு பிடிப்பார்!
அடிடா படலையில.....!

தீப்பள்ளயத்துத் திருவிழா மாட்சிபெற
மூப்பன் — முருகன் — முகாமைக் குழுவுக்குச்
சாப்பாடு சாராயம்... சாதுரியமாய்க் கொடுத்து
ஆப்புக்கள் வைப்பார்!
அடிடா படலையில.....!

நித்திரையிலும் செந் நெருப்பையே தின்னுபவன்
சத்திய மாய்ச்சமி பாட்டில் கரி பேல்வான்!
மத்தியா னத்தில் மழைக்குக் குடைபிடித்தால்;
பக்தரிவர் ராவில்
வெயிற்குக் குடைபிடிப்பார்!
அர்த்தவான்; தம்பி
அடிடா படலையில.....!

அர்த்தவான்; தம்பி
அடிடா படலையில.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மல்லிகை'
பதினைந்தாவது ஆண்டு மலர்க் கூட்டம்

எஸ். செல்வம்

'மல்லிகை' வழமைபோல் தனது பதினைந்தாவது ஆண்டு மலர்க் கூட்டத்தை இம்முறையும் பொரல்லையிலுள்ள நண்பர் இல்லத்தில் கொண்டாடியது.

சபா: ஜெயராசா அவர்கள் தலைமை வகித்த இக்கூட்டத்தில் முதலில் சி. வி. தம்பையா பேசினார். அவர் மல்லிகையின் சேவையை வாழ்த்திப் பேசுகையில் முட்களுக்கு மத்தியில், இரத்தம் சொட்டச் சொட்டப் பதினாறு விரல்கள் அடங்கிய உருவமொன்று — ஒளி மயமான எதிர்காலம் பின்னணியில் அமைய — மல்லிகை மலரைத் தாங்கி நிற்பதுபோல், முழுக்க முழுக்க மல்லிகையின் வரலாற்றுப் பின்னணியைக் கருவாகக் கொண்டு வெளிவந்த மல்லிகை பதினைந்தாவது ஆண்டு மலரின் அட்டைப் படத்தை அமைத்துக் கொடுத்த ரமணியை வெகுவாகப் பாராட்டினார்.

மு. கனகராசன் மல்லிகை மலரில் வெளிவந்த ஆக்கங்களை ஆய்வு செய்து பேசினார். அதில் வந்த குறிப்பிட்ட சில கதைகள், கட்டுரைகளைத் தவிர மிகுதி தரமற்றவை எனச் சாடினார். குறிப்பாகக் காவலூர் ஜெகநாதனின் சிறுகதை தரமற்றது. அதைக் கவனித்துத் திருத்தாமல் பிரசுரித்தது ஆசிரியரின் தவறு என்றார். மேலும் வல்லிக்கண்ணன் போன்ற இந்திய எழுத்தாளர்கள் தனது ஆய்வுகளில் இலங்கை எழுத்தாளர்களை இருட்டடிப்புச் செய்கிறார்கள். ஆனால் நாம் அவர்களை இங்கு கௌரவித்துப் பாராட்டுகிறோம் எனச் சாடினார்.

திக்குவல்லைக் கமால் தனக்கே உரித்தான அடக்கமான உரையில் என்னைப் போன்ற நிறைய முஸ்லிம் எழுத்தாளர்களின் ஆக்கங்கட்குக் களம் அமைத்துக் கொடுத்தது மல்லிகை. நான் ஒரு எழுத்தாளன் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வதற்கு நான் எழுத ஆரம்பித்த காலம் தொடக்கம் எனக்கு ஊக்கமும், ஆதரவும் நல்கியது மல்லிகை என நன்றிக்கடன் செய்தார்.

அந்தனி ஜீவா பேசுகையில் பணம் பண்ணும் நோக்கில் முழுக்க முழுக்க விளம்பரங்களைத் தாங்கி வெளிவரும் இன்றைய காலகட்டத்தில் விளம்பரங்களையே எதிர்பாராமல் விடயதானங்களைக் கூடுதலாக உள்ளடக்கி வெளிவந்து பதினைந்தாவது வயதையும் தாண்டிச் செல்வது பாராட்டுக்குரிய சாதனை தான். பெருமையாவும் ஆசிரியருக்கே உரியது என்றார்.

பிரேம்ஜியும் தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

எல்லோருடைய கருத்துக்களையும் செவிமடுத்த ஜீவா முடிவில் தனது உரையை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்தினார். கனகராசன் — ஜெகநாதன் பிரச்சினைக்கு 'தான் என்றும் எழுத்தாளன் படைப்பில் கைவைப்பதில்லை என்றும், தானும் ஒரு எழுத்தாளனாக இருக்கின்றவனாகையால் அதைப்பற்றி நன்றாக உணர்ந்தவன் என்றார்.

இருந்தும் ஜெகநாதனின் சில இலக்கியத் தில்லு முல்லுகளை வெளிச்சம்போட்டுக் காட்டி, இத்தகையோர் விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும் எனச் சாடினார். வல்லிக்கண்ணன் விவகாரத்தில் எமது இலங்கைச் சிவத்தம்பி, கைலாசபதி போன்றோரே எம்மைப்பற்றிச் சரியான கணிப்பீடு செய்து எழுதாத பட்சத்தில் நாம் எப்படி இந்திய எழுத்தாளர்களைக் குறை கூறுவது என்றார்.

மேலும் தனது உரையில் 'தான் இதுவரையில் மல்லிகையை வளர்த்தெடுக்கத் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து வருபவன் என்றும் அதன் பின்னணி வரலாற்றை உணர்ச்சி பூர்வமாக எடுத்துக் கூறினார்.



மூன்று புத்தகங்களும் கொழும்பில் சி. எல். எஸ். புத்தக நிறுவனத்திலும் ஆல் சிலோன் டிஸ்டிபியூட்டர்ஸிலும், லீலா சலூனிலும் பெற்றுக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் பெறும் இடம் பூபாலசிங்கம் புத்தகசாலை.

மல்லிகை

மல்லிகை மாசிகை சும்மா படித்து விட்டுப் போகும் சஞ்சிகை அல்ல. அது எதிர்கால இலக்கியத் தேவைக்காக இன்று வழி சமைக்கும் இதழ். எனவே ஓர் இதழைக் கூடத் தவற விட்டு விடாதீர்கள். உங்களது கவனக்குறைவு தரமான ஓர் இதழைத் தவற விட்டு விடக் கூடும். பின்னர் அதைச் சேர்த்து முழுத் தொகுப்பிலும் இணைக்கலாம் என அசட்டையாக இருந்தீர்களானால் அது நடைபெறுமலே போகவும் கூடும். எனவே ஒவ்வொரு இதழையும் மிகப் பொறுப்புணர்ச்சியுடன் சேமித்து வைக்கப் பாருங்கள்.

தமது அலட்சியத் தனத்தால் தவற விட்ட இதழ்களைக் கேட்டுப் பலர் எம்முடன் தொடர்பு கொள்ளுகின்றனர். சிலருக்கு உதவ முடிகிறது. பலருடைய அபிலாஷை நிறைவேறுவதில்லை.

இது எச்சரிக்கையல்ல; அன்பு வேண்டுகோள்!

குறிப்பாக உயர் கல்வி மாணவர்களும் தரமான இலக்கியச் சுவைஞர்களும் பிரதிகளைப் பத்திரப்படுத்த வேண்டும், எக் காரணத்தைக் கொண்டும் இரவல் கொடுக்கக் கூடாது.

மல்லிகை இதழ்களின் பெருமை உடன் நிகழ் காலத்தில் உடனடியாகத் தெரியவராது போகலாம். காலம் செல்லச் செல்லத்தான் இதனது உள்ளட்கப் பெருமை கொஞ்சம் கொஞ்சமாகப் புரியும். அதைப் பூரணமாகப் புரிந்து கொள்ளக் கூடிய காலத்திற்காகவாவது இதழ்களைப் பத்திரப்படுத்துங்கள் பின்னர்தான் இந்த அறிவிப்பின் முழுக் கருத்தும் உங்களுக்கு விளங்கும்.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டில் வெகுசன தொடர்புச் சாதனங்களின் செல்வாக்கு

ஈழநாட்டுப் பின்னணியிற் சில அவதானிப்புகள்

ஆ. சிவநேசச்செல்வன்

எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ!

என இரவிகுல நாயகனாகிய இராமனின் காவியத்தைப் பாடிய கம்பன் அயோத்திமாநகரின் கல்விச் சிறப்பைப் பாடினான். மக்களின் படைப்பாற்றல் மலர்ச்சியிலும் மானுடத்தின் வெற்றியிலும் நம்பிக்கையுடைய தமிழ்க் கவிஞன் இயற்கை நலங்களும் செயற்கை நலங்களும் ஒருங்கிணைந்த அறிவறிந்த புதிய உலகையே கோசலமாகக் கண்டான்.

கம்பன் கண்ட இலட்சிய உலகும் நெறிதிறம்பா விழுமிய வாழ்வும் ஒருபுறமிருக்க — அவன் காண விழைந்த மனிதகுல மலர்ச்சியையும், அறிவுலக எழுச்சியையும் ஒரு கணம் நினைவு கூருதல் சுவையான அனுபவமாகும். இதே வழியிலேதான் இந்த நூற்றாண்டிலே எழுச்சிபெற்ற மனித சக்தியின் மேன்மையையெல்லாம் வாயார உணர்வோடு பாடிய திரையுலகக் கவியரசு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்,

"சந்திரனைத் தொட்டதின்று மனித சக்தி
சரித்திரத்தை மீறியது மனித சக்தி
இந்திரன்தான் விண்ணாட்டின் அரசனென்ற
இலக்கணத்தைத் திருத்தியது மனித சக்தி"

என நம்பிக்கை ஒளியோடு பாடினான்.

நம்மைச் சூழவுள்ள உலகின் ஆற்றலையெல்லாம் நம்வசமாக்கி 'காற்றிலேறியவ் விண்ணையும் சாடும்' சர்வவல்லமை பொருந்திய மனித குலம் உருவாகி வருகிறது. விஞ்ஞான அறிவையும், தொழில் நுட்பத் திறனையும் கலை, இலக்கிய, கலாசார வளர்ச்சியிற் கூட நிகரற்ற வண்ணம் பயன்படுத்திச் சர்வ ஜனரஞ்சகமான நிலையில் மனிதனுடைய ஆளுமை வளருகின்றது. சுருங்கக் கூறின் இன்றைய உலகளாவிய சமூகத்தை உள்ளும் புறமும் ஆட்கொண்டுள்ள வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் பாரிய வளர்ச்சியே, 'பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்ளப்' பெரு நலம் பயக்கும் புதிய சமுதாயத்தை எழுச்சிபெறச் செய்துள்ளது எனக் கூறலாம். 'ஓர் சூலம் — ஓர் நிறை — ஓர் விலை' என்ற நிலையிலே எல்லாரும் அமர நிலை எய்தும் நன்முறையாகிய உலக சமுதாயத்தை நோக்கி எழுச்சி

பெற்றுள்ளதுடன் இலக்கிய நோக்கும் போக்கும் புதிய அர்த்தத்துடன் இற்றை நூற்றாண்டிலே வளம்பெற்று வருகின்றது.

விஞ்ஞான தொழில் நுட்ப சாதனங்களின் பின்னணியிலான வெகுசன தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டு முதலாகப் புதிய பரிமாணங்களைப் பெறலாயிற்று. அரசியல் பெருளாதார மரபுகளிலே ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றாவது உலக நாடுகளிலும் குறிப்பாக இலங்கையிலும் பாரிய மாற்றங்களை உருவாக்கியது. மக்கள் மத்தியில் உருவாகிய புதிய மனோபாவங்களும், சிந்தனைகளும், வாழ்க்கை முறைகளும், மக்களைப் பரந்த அளவில் சாதி, சமய, மொழி அடிப்படைகளைக் கடந்த உலகளாவிய மனோபக்குவத்துடன் இயங்கச் செய்தது. பொருளாதார வளர்ச்சி, சமூக சமத்துவம், சமூக அமைதி, அரசியல் விழிப்பு ஆகிய பல்துறைகளைப் பற்றியும் மனந்திறந்து சிந்திக்கும் வெகுசனகுழாம் உருவாகும் நிலை படிப்படியாக மலர்ச்சி பெற்றது. இவ்வகை வளர்ச்சிப் போக்குகள் யாவற்றிற்கும் மூல காரணமானது நவீன வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியும் ஒன்றிணைந்த செயற்பாடுமேயாம். சமூக பொருளாதார மாற்றங்கள் நாட்டின் தேசிய வளர்ச்சியையும், இலக்கிய வளர்ச்சியையும் புதிய பரிமாணங்களுடன் உருவாக்கும். அத்தோடு கலாசார இயல்புகளையும், இயக்கங்களையும், செயற்பாடுகளையும் உருவாக்கும் பின்னணியும் மேற்குறிப்பிட்ட அடிப்படையிலேயே அமையும்.

அறிவுலக மலர்ச்சியின் அடியாகவே தேசிய வளர்ச்சியானது உருவாகும் என்ற நிலையிலே, வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் நிலை இன்று உருவாகியுள்ளது. புதிய நகரங்களின் தோற்றமும், பொருளாதார முறை மாற்றமும், கல்வியுலக விழிப்பும் வெகுசன சாதனங்களின் ஒன்றிணைந்த செயற்பாடுகளுமே நவீன சமூ சமுதாயத்தை உருவாக்கியுள்ளது. எழுத வாசிக்கத் தெரிந்த மக்கள் கூட்ட மலர்ச்சியுடன், தொழில் நுட்ப சாதனங்களினதும், உற்பத்திச் சாதனங்களினதும் முன்னேற்றமும் இணைந்த சமூகத்திலேதான், பத்திரிகைகளின் தோற்றமும், திரைப்படங்களின் தயாரிப்பும், ஒலிபரப்பு நிலையங்களின் ஒன்றிணைந்த செயற்பாடும் உருவாக, அறிவுலக மலர்ச்சியும், எழுத்தறிவு எழுச்சியும் வேகமடையும். புதிய சிந்தனைகளையுடைய வளர்ச்சி நோக்கை அவாவும் நவீன சமுதாயத்தின் தோற்றம் சுயசிந்தனையின் பாற்பட்ட மாற்றங்களை எதிர்நோக்கும் வகையில் இருபதாம் நூற்றாண்டில் மலர்ச்சி பெற்றது. சமூக அந்தஸ்தையும் சமூக எதிர்பார்ப்புக்களையும் எதிர் நோக்கும் மக்கள் குழாம் நவீன வளர்ச்சிகளை நிர்ணயிக்கும் காலம் உருவாகியது. தான்பெற்ற அறிவுலக விழிப்பின் பயனாகப் பத்திரிகைகளை வாசித்து, வானொலியைக் கேட்டுத், திரைப்படங்களைப் பார்த்து, தன்னைச் சூழவுள்ள அகப்புற மாற்றங்களைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கும் சமுதாயம் மலர்ச்சி பெற்றது. தனி மனித சிந்தனைகளைச் சமூக சிந்தனைகளாக்கியதுடன், தன்னைச் சூழவுள்ள அகப்புறச் சிந்தனைகளை நெறிப்படுத்தும் வடிவங்களை இனங்கண்டும், பயன்படுத்தியும் மக்கள் வாழத் தலைப்பட்டனர். நவீன வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் செயற்பாடும், பயன்பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகைச் சூழலிலேயே வளர்ச்சி பெற ஆரம்பித்தது. வெகுசன தொடர்புச் சாதனங்களின் இயக்கம், பரந்த சமூகக் குழுவினரை நோக்கி விரிவடைந்ததுடன் புதிய செய்திகள், புதிய சிந்தனைகள், புதிய மனோபாவங்கள் என்ற வகையில் நாடு வளர்ச்சிப்பாதையை நோக்கி வீறுநடை போடலாயிற்று. பரந்துபட்ட அனுபவங்களையும், கலாசார இலக்கிய மலர்ச்சியையும், பொருளாதார அரசியல் வடிவங்களையும் இணைக்கும் வகையிலான ஆக்கபூர்வமான தொடர்பு சாதன வளர்ச்சியின் மலர்ச்சி சமுதாய உறவு முறைகளைப் படிப்படியாக வலுவடையச் செய்தது.

மேலை நாட்டுத் தொடர்பால் உலக இலக்கிய உறவும், புதிய ஆய்வுத்திறனும் மறுமலர்ச்சி உணர்வும் மக்கள் யுக சிந்தனைகளும் மலர்ந்த நிலையிலே வெகுசன தொடர்புச் சாதனங்கள் சர்வ வியாபகம் கொண்ட சக்திகளாக விளங்குகின்றன. சமூக வளர்ச்சியின் விளைவாகவும், உற்பத்தி முறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களின் விளைவாகவும் வர்க்கங்கள் ஆதியன மேலோங்கி நிற்பதையே நவீன சகாப்தம் என்கின்றோம்.

'உலகம் ஒன்றுபட்டு விட்டது. நாடுகள் வீடுகள் ஆகிவிட்டன: ஒரே உலகம் ஒரு உலகம்' என்ற கருத்துச் செல்வாக்குப் பெற்று வருகிறது. உலகின் பல்வேறு அறிவு வளர்ச்சித் துறைகளிலும் ஏற்பட்டு வரும் மாபெரும் முன்னேற்றங்களும் சாதனைகளும் புதிய மனிதனை உருவாக்குகின்றன. இந்தப் புதிய மனிதனைப் பாரதி பாடினான். இக்பால் பாடினான். அனைத்துலக மனிதனை நோக்கி ஓடிய இரவீந்திர நாத் தாகூர் பாடினார். இவ்வாறான நிலையிலே மகத்தான சக்திகளைத் தன்னுள்ளே கொண்டிருக்கும் மனிதனைத் தட்டிக் கொடுத்து ஆயிரமாயிரவரை வெற்றி கொள்ளும் வகைக்கு இட்டுச் செல்லும் சாதனமாக் வெகுசன தொடர்புச் சாதனங்கள் இயங்குகின்றன என்ற உண்மையை இன்று புத்திபூர்வமாக உணர்ந்து வருகின்றோம்.

இலங்கையிலே பத்தொன்பதாம் நூற்றாண்டாரம்பம் முதலாகப் படிப்படியாக வளர்ந்து வந்த மேலைநாட்டு நாகரிகம் வெகுசன சமூகத்தை உருவாக்கியதுடன் வெகுசன கலாசாரத்தையும் தோற்றுவித்தது. அச்சுக்கலையின் அறிமுகமும் மற்றும் கல்வித் துறை மலர்ச்சியும், வாழ்க்கை முறை மாற்றங்களும் புது வகையான மரபுகளை உருவாக்கின. மனிதனது, எழுத, வாசிக்க, சிந்திக்கத் தெரிந்த ஆற்றல்கள் ஜனநாயகப் படுத்தப்பட்டது. அஞ்ஞான இருளை அகல்விக்கும் நல்விளக்குகளாகிய புத்தகங்கள் அச்சு வாகனம் ஏறின. 'எழுதா எழுத்தின்' மூலம் ஓலைச் சுவடிகள் வழிவந்த இலக்கியச் செல்வங்கள் யாவற்றையும் அக்கால அறிஞர்களான ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, தி. த. கனகசுந்தரம்பிள்ளை, குமாரசுவாமிப் புலவர் வரை பலரும் காண விளைந்தனர். கற்சிறைக்குட் பட்டதாகக் காணப்பட்ட கல்வியானது மிசனரிமாரின் சமய இயக்கங்களாலும், எதிர் இயக்கங்களாலும் விரிவடைந்ததுடன் மனிதனது சமூக உறவுகளும் பொருளாதார உறவுகளும் ஒன்றிணைந்த நிலையிலே வளம் பெறும் சூழல் உருவாகியது. கூட்டுச் சிந்தனை நிலைமாறி மக்கள் ஒவ்வொருவரும் தம்மைப் பற்றியே சிந்திக்கும் சூழல் தோன்றியது. இவ்வகை உணர்வை அதிகரிக்கும் தன்மையினதாகப் பத்தொன்

பதாம் நூற்றாண்டுப் பிற்பாதி முதலாக எழுச்சி பெற்ற பத்திரிகைகளும் அமையலாயின. உதயதாரகை முதல், இலங்காபிமானி, இலங்கை நேசன், முஸ்லிம் நேசன், இந்துசாதனம், ஈழகேசரி ஆகியவாக, இன்றைய வீரகேசரி, தினகரன், தினபதி, ஈழநாடு வரையிலான பன்முகப்பட்ட வளர்ச்சிகளும், வெகுசன கலாசாரத்தை உருவாக்கி வருகின்றன. புத்தகங்களை வாங்கவும், பத்திரிகைகளை வாசிக்கவும், அறிவை நுகரவும் விளைந்து தாகம் கொண்டவனாக மனிதன் மாற முற்பட்டான். கல்வி என்பது மேல் மட்டத்தினருக்கும் சிறு குழுவினருக்கும் மட்டும் உரியது என்ற மாயை அகன்று 'அனைவருக்கும் கல்வி' என்ற நிலை இருபதாம் நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் நன்கு உரம்பெற்றது. கல்வி பரந்துபட்ட மக்கட் கூட்டத்தை அணைக்கும் வகையில் விரிவடைந்தமையினால் மொழிநடையும் இலக்கிய மரபும் பரவலாக்கப்படும் சூழல் உருவாக்கியது. வெகுசன சாதனத்தின் தலைப் பிள்ளையாகிய உரைநடை மலர்ச்சியின் விளைவான நாவல் இலக்கியத்தின் தோற்றமும், சுருங்கக் கூறின் நவீன இலக்கியப் பாரம்பரியத்தின் தோற்றமும் இவ்வகை இயக்கத்தின் பின்னணியிலே செழுமை பெறலாயிற்று.

வெகுஜன சாதனங்களின் பிரதான பண்பு அறிவையும் சிந்தனை வளர்ச்சியையும் பரவலாக்குவதே. தொடர்பு சாதனங்கள் எனப் பரந்த அடிப்படையிற் கூறும்போது எமது மனக் கண்முன் விரிவது ஒரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமேயாகும். குழு முறைச் சமுதாயத்திற் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் தொடக்கம், புத்தகங்கள், பத்திரிகைகள், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி வரையிலான பன்முகப்பட்ட வளர்ச்சியை இன்று எதிர்நோக்குகின்றோம். தனி மனிதருக்கு இடையேயமைந்த உறவு முறைத் தொடர்புகள் முதல் அனைத்துலக மக்கட் கூட்டத் தொடர்புகள் வரை வியாபித்த பண்பாட்டு மாற்றம் இன்றைய உலகை ஒன்றிணைத்து விட்டது. சுருங்கக்கூறின் இயந்திரப் புரட்சியின் வேகமும், தொழில் நுட்ப சாதனங்களின் வளர்ச்சியும் இன்றைய உலகையே ஆட்கொண்டு விட்டன.

இருபதாம் நூற்றாண்டாரம்பம் முதல் இலங்கையிலே வரன்முறையாக ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்கள் புதிய பரிமாணங்களை இலக்கிய உலகிலும், இலக்கிய உறவிலும் பரவலாகத் தோற்றுவித்துள்ளன. சமய பிரசார இயக்கங்களும் அதனடிப்படையாகத் தோன்றிய அச்சகத் தோற்றமும், பத்திரிகை வளர்ச்சியும், நூற்பதிப்பு முயற்சிகளும், உரைநடைச் சாதனத்தை வெகுசனப்படுத்தியது. அறிவைச் சாதாரண மனிதனிடம் எடுத்துச் செல்லும் சூழல் உருவாகியது. இலக்கியப் போக்கிலும் புதுவகைத் தேவைகள் இனங் காணப்பட்டன. நாட்டின் சகல இயக்கங்களிலும் கற்றோரும் மற்றோரும் பங்கு கொள்ளும் வாய்ப்பும், தேவையும் ஏற்பட்டமையினால் புத்தகங்கள் பத்திரிகை முதலிய வெகுசன சாதனங்கள் சராசரித் தன்மையான மக்கட் கூட்டத்தினரை நோக்கி இயங்கும் தேவை உருவாகியது. சமூக மலர்ச்சியும் அதனடியாகத் தோன்றிய அரசியல் விழிப்பும் எழுத்துலக விரிவுக்குக் காலாகியது. இலக்கிய உலகம் வெகுசன சாதனங்களின் ஈர்ப்புகளுக்கெல்லாம் அசைந்து ஈடுகொடுக்கத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தை ஜனரஞ்சகப்படுத்தும் முயற்சிக்கு வெகுசன சாதனங்கள் பக்கபலமாக இயங்கலாயின. வானசாத்திரம் முதல் வாகடம் வரை செய்யுள் மரபில் அமைந்த காலம் போய் உரை நடையிலே — ஓரிரண்டு வருட நூற்பழக்கம் உள்ளவரும் உணரும் வகையில் இலக்கியம் செழுமை பெற்றது. ''வாய்பாடாக முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோற் போற்றும் காலம் போய் ஆய்ந்தறிந்து, அல்லது சிந்தித்துக் கூறும் வாய்ப்பு சாதாரண மனிதனுக்கும் ஏற்பட்டது. இவ்வுண்மையை அறிவியற் கருத்துக்களை ஆற்றலோடு 'கண்டறியாதது' என்ற கவிதைத் தொகுதி மூலம் வெளிப்படுத்தியுள்ள கவிஞர் இ. சிவானந்தன்

வீட்டிலே வேலையின்றி விருந்தையில் தூங்கும், தாய்தன்
பாட்டிலே கிடக்கும் நூலைப் படித்திடல் கூடும் அன்றே
ஏட்டிலே 'இங்கிலீசில்' இதுவரை இருந்த சேதி
வீட்டிலே பரவல்கூடும் விளைந்திடும் நன்மையின்று
நாட்டிலே 'அறிவுப் பஞ்சம்' அகன்றிட வழிகள் உண்டாம்;

மக்களின் அறிவுப் பாதை மலர்ச்சியானது. 'ஒன்றிரண்டு கற்றவர் விழுங்கிவந்த கற்பகக் கனியை யாவரும் பெற்றிடல் கூடும் என்ற நிலையையே மேற்போந்த அடிகள் இலக்கியச் சுவையுடன் கூறுவதைக் காணலாம். சமுதாயத்தின் தவிர்க்கமுடியாத மாற்றங்களை உணராது, 'அறிவினை அடகுவைத்து ஓதுவார் முறையேயேகும் ஒருவழிப் பாதைவிட்டு' மனித வாழ்க்கை புதிய பரிமாணங்களை எதிர் நோக்கியது. வெகுசன சமூகத்தின் வளர்ச்சியால் 'சிலர் வாழப் பலர் வாடும்' சமுதாயம் அமைப்பு மாற்றம் பெற்றது; முருகையன் கூறுவது போல,

'சாதாரண சம்பவங்கள் தத்துவத்தை
ஆதாரமாக்கி அமைந்து கிடத்தல் அதிசயந்தான்'

என்ற நிலையிலே மனிதன் வாழ்வின் சகல கூறுகளையும் காண முற்பட்டான். இலக்கியப் பொருள் மக்கள் யாவரையும் ஒருங்கிணைக்கும் வகையில் புதுவகையாக 'வாசகருசிக்கு' ஏற்ப மலரலாயிற்று;

இக்கால இலக்கிய மரபிற்கேற்பத் தோன்றிய நவீன இலக்கியங்கள் பரந்த வாசக கூட்டத்தை நோக்கி எழுந்தன. அனைவரும் கல்விபெறும் வாய்ப்புப் பெற்ற இன்றைய சூழலிலே எழுத்தாளர்களாகவும், வாசகர்களாகவும் தோன்றிய அறிவறிந்த மக்கள் குழாத்தினர் இலக்கிய உலகை ஆட்கொண்டனர். பாரம்பரிய சமூகங்களில் எழுத வாசிக்கத் தகுதியற்றிருந்தவர்களும் கல்விச் சூழல் வாய்க்கப்பெறாதவர்களும் அறிவுலகை ஒருகணம் திரும்பி நோக்கினர். இலக்கியப் பொருள் மரபின் விரிவும் தேவையும் புதிய இலக்கிய வடிவங்களை உருவாக்கின. கவிதை தொடர்கதை, துப்பறியுங் கதை, குறுநாவல், சிறுகதை என்ற அடிப்படையில் புனைகதை இலக்கியங்களாக விரிவு பெற்றன. தனியே ஒரு பொருளைப்பற்றி எழுதப்படும் தனி நிலைக் கவிதை மரபு தோன்றியது; பண்டைய மரபில் தனிக் கதை மரபு காணப்படுகின்றதெனினும் இடைக் காலத்தில் பிரபந்தங்களாகவும், காவியங்களாகவும், புராணங்களாகவும் மாறிய நிலைபோய் மீண்டும் புதிய தேவைக்கு ஏற்பத் தனித்தனிப் பொருள் மீது பாடல் எழுதப்படும் சங்க இலக்கிய மரபு சார்ந்த நெறி தோன்றியுள்ளது. இது வெகுசனப் பண்பை அடிநிலையாகக் கொண்டு தோன்றியதென்பது ஈண்டு மனங்கொள்ளத் தக்கது. வெகுசன மரபிற்கேற்ற சொல்லாட்சித் திறன் கொண்ட கவிதை மரபு பாரதி காலம் முதல் வளம்பெற்று வருகிறது. கவிதைத் தொகுதிகளின் தோற்றமும், கவியரங்கமாகிய மேடைப் பாடல்கள், இசைப் பாடல்கள், கிராமியப் பாடல் எனப் பெற்ற வளர்ச்சி நெறி, இலக்கிய மரபிற் காணப்படும் தவிர்க்க முடியாத மாற்றத்தை இனங்காட்டுவதாகும். அச்சு மரபு, அடிபிரித்துப் பாடல்களை அச்சிடும் மரபையும், கவியரங்கங்கள், உரையாடலுடன் கூடிய பேச்சோசையைப் பண்பையும், உரைநடைச் சாயல் பெற்ற வசன கவிதைகளையும் தோற்றுவித்தன. சிறு கதைகள் நாவல்கள் ஆதியனவற்றில் வாசக இரசனைக்கு ஏற்ப எளிமையான நடை மேற்கொள்ளப்பட்டது. பாமர ரஞ்சகமான நிலையில் பழமையும் புதுமையும் கலந்ததாக இலக்கியப் பொருள் விரிந்தது. ஏறத்தாழ 1930 வரையில் இலங்கையில் பத்திரிகைத் துறை விரிவு பெற்றமையைத் தொடர்ந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அடியாகத் தோன்றிச் சிறு சஞ்சிகை வளர்ச்சி வெகுசன சமூகத்தின் அபிலாசைகளைப் பேணும் வகையில் எழுச்சி பெற்றது. தொடர் கதைகளும், துப்பறியும் கதைகளும், குறுநாவல்களும் வெகுசனப் பண்பை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தவை. பேச்சு மொழிக்கு உரிய இலக்கிய அந்தஸ்துச் செழுமைபெற மறுமலர்ச்சி இயக்கம் சிறு சஞ்சிகைகளின் பின்னணியில் போராடியது. பெருந்தொகையான தென்னிந்தியத் தமிழ் நாவல்களும் துப்பறியும் கதைகளும், வாசக ருசியையும் வாசகர் கூட்டத்தையும் பெருக்கின. சுருங்கக் கூறின் வாசக ருசியை மையமாகக் கொண்ட நிலையில் புதுவகைத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டே வெகுசன சமூகத்தின் ஆளுமைக்கு ஏற்ப இலக்கிய மரபில் புதுநெறிகள் மேற்கொள்ளப்பட்டன. அண்மைக் காலத்தில் நவீன இலக்கியத்தில் வெகுசன கலாசாரத் தாக்கத்தை இனங்காட்டும் வகையில் ஒப்பியல்ரீதியாக பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோர் எழுதியுள்ள கட்டுரைகள் குறிப்பிடத் தக்கன.

ஏறத்தாள 1940 கள் முதல் உருவாகிய மறுமலர்ச்சி இயக்கத் தாக்கமும், தென்னிந்திய சிறு சஞ்சிகைகளான மணிக்கொடி, கிராம ஊழியன், கலாமோகினி, ஆகியவற்றுடன் இலங்கையில் தோன்றிய மறுமலர்ச்சியும், ஈழகேசரிப் பத்திரிகை உருவாக்கிய இலக்கியம், கலாசார சூழலும் நவீன இலக்கிய முயற்சியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின. சில்வாழ்நாளும் பல்பிணியும் கொண்ட சிறு சஞ்சிகைகள் காலந்தோறும் தோன்றி இலக்கிய மரபுக்குப் புதியபரிமாணங்களை அளித்திருப்பினும் பரந்த வாசகர்கூட்டத்தைப் பின்னணியாகக் கொண்ட சஞ்சிகைகள் தோற்றம் பெறவில்லை. தேனருவி, வசந்தம், அஞ்சலி, போன்ற சஞ்சிகைகள் தோன்றியிருப்பினும் அவை பரந்த மக்கட் கூட்டத்தினரின் வாசக ருசியை மையமாகக் கொண்டு இயங்கவில்லை, மல்லிகை சிறு சஞ்சிகை என்ற வகையில் இன்று ஏற்படுத்தி வரும் இலக்கியத் தாக்கம் குறிப்பிடத்தக்கது. சிரித்திரன் இலக்கியத் தாக்கம் கொண்ட புனைகதைகளை வெளியிடுவதுடன், நகைச்சுவை, கேலிச் சித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிய அடிப்படையில் இலக்கியத் தேவையை நிறைவு செய்து வருகிறது.

இலங்கையின் பிரதான பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், தினபதியின் சிந்தாமணி ஆரம், ஈழநாடு ஆகியன பரந்த வாசக வட்டத்தைக் கொண்ட பத்திரிகைகள். புனைகதை வளர்ச்சியிலும், மற்றும் நவீன இலக்கிய வெளிப்பாட்டு முறையிலும் இவை சிறிய அளவில் ஏற்படுத்தி வரும் தாக்கம் மதிப்பிட வேண்டியதொன்று.

வீரகேசரி பிரசுர நிறுவனம் இலங்கையில் வாசகருசியை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது. பரந்த வாசக கூட்டத்தை அரவணைக்கும் வகையில் வெகுசனப் பண்புடன் வெளியிட்டு வரும் நாவல், சிறுகதைத் தொகுதிகள் குறிப்பிடத் தக்கவை. இதுபோலத் தனிப்பட்ட நிறுவனங்கள் பரந்த அடிப்படையிலான பொருள் முதலீட்டுடன் இயங்கவில்லை.

திரைப்படங்கள் இன்று பரவலான வெகுசன இயல்பு கொண்ட சாதனமாக இலங்கையின் இலக்கிய கலாசார அறிவுச் சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் பாரியது என்றே கூறவேண்டும். பார்வையாளர்களின் மனோபாவங்களையும், நாளாந்த வாழ்க்கையையும், மதிப்பீடுகளையும் பாதிப்பதாகவே உள்ளது. இந்தியத் திரைப்பட உலகின் செல்வாக்கும், பாமர ரஞ்சகமான வெறும் வர்த்தக ரீதியான செயற்பாடும் வெறுமனே எமது சமூகத்தின் மீது தென்னிந்திய வாழ்க்கை முறைகளையும் மதிப்பீடுகளையும் திணிக்கும் வகையினதாகக் காணப்படுகின்றது. திரைப்படங்கள் பரந்த பார்வையாளர் கூட்டத்தின் மீது கருத்தாக்கம் செலுத்தும் இயல்பு வாய்ந்தது. உயர்மட்ட வாழ்க்கையின் கோலங்களையும் அவற்றின் எழுச்சியையும், வீழ்ச்சியையும், பலவீனங்களையும் பிரதிபலிக்கும் வகையிலும் மக்களின் பாரம்பரிய அழகியல் கோட்பாடுகளைப் பாதிக்கும் வகையிலும் பாரிய முதலீட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கும் பாமர ரஞ்சகமான தென் இந்திய திரைப்பட உலகம், ஏறத்தாள கடந்த அரை நூற்றாண்டு காலமாக இலங்கை மக்களிடையே ஏற்படுத்தி வரும் செல்வாக்கு ஈழத்து மக்கள் வாழ்க்கையிலும், இலக்கிய நோக்கிலும் பரவலான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏறத்தாள கடந்த இரு தசாப்தங்களில் ஈழத்துத் தமிழ்த் திரைப்பட முயற்சிகள் குறிப்பிடத்தக்கவையெனினும் தொடர்ந்து நிலவும் இந்திய திரைப்படத் தாக்கத்தினால், வாசகருசி, கதைக்கரு, வாய்ப்பாட்டுத் தன்மை வாய்ந்த கதைப் பண்பு, நடிகர் செல்வாக்கு, பாடல், இசை ஆதிய அம்சங்களைப் பொறுத்துத் தனித்துவ நெறியைச் சுட்டுவனவாக இல்லை, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில அம்சங்களை இனங்காட்ட முயலலாம். அதுவும் வலிந்து கூறுவதாகவே அமையும்.

வெகுஜன சமூகத்தின் பொழுது போக்குச் சாதனமான திரை உலகம் மக்களின் மனோபாவம் மதிப்பீடுகள் கலாசாரம் என்ற வகையில் பரந்த அளவிலான தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைகிறது. மக்களுடைய வாழ்வின் சகல அம்சங்களையும் இனங்காட்டக் கூடிய திரைப்பட சாதனம், தென்னிந்தியத் தாக்கத்தினால் வலுவிழந்ததுடன் சமூகத்தின் பலவீனங்களுக்கெல் ஒருவகையில் ஆதார சுருதியாக அமைவது குறிப்பிடத்தக்கது. மலினப் படுத்தப்பட்ட பாமர ரசனைக்கு ஈடுகொடுத்துத் தேக்கமுற்ற நிலையில் இயங்கும் பாமர ரஞ்சகமான இலங்கைத் திரைப்பட உலகம் தனித்துவத்துடன் நவீன இலக்கிய சூழலை நெறிப்படுத்தும் வகையில் இயங்கும் நிலையை எதிர்காலத்திலேதான் அவதானிக்க வேண்டும்.

உலக நாடுகளில் வானொலி, தொலைக்காட்சி, ஆதியனவற்றின் பரந்த வெகுசன செல்வாக்கு உலகளாவிய சமூகத்தை நெருங்கி உறவாட வைக்கின்றது. மக்களின் உணர்வுகளைச் செவிப்புலனூடே பண்படுத்தும் ஆற்றல் வாய்ந்த வானொலிச் சாதனம் வாழ்க்கைக்கு 'உயிரை' அளிக்கின்றது என்பர். சமூகத்தை வழிப்படுத்துவது மட்டுமன்றி வாசக ருசியின் தரத்தை உயர்த்தும் வலுவுள்ள சாதனமும் வானொலியேயாகும். வானொலியின் சர்வவியாபகப் பண்பு, அறிவை ஜனநாயகப்படுத்தும் பண்பு. வாசக ருசியின் தரத்தை நிர்ணயிக்கும் பண்பு ஆதியன யாவும் இன்றைய இலக்கிய வளர்ச்சியினை நிர்ணயிக்கும் மறைமுகமான காரணிகளாகும்.

இலங்கையில் அரச கட்டுப்பாட்டுக்குட்பட்ட வகையில் இயங்கும் வானொலி சாதனத்தின் ஆரம்பம் 1923-ஆம் ஆண்டு வரையிலாயினும் அதன் பரந்துபட்ட மக்கட் கூட்டத்தினரை நோக்கிய செயற்பாடு 1950-ஆம் ஆண்டின் பின்னரே முழுமை பெற்றது. மக்கள் வெளிப்படையாக அறியாத வகையில் அவ்வவர் உணர்வுகளையும், ரசனைகளையும் பாதிக்கும் ஆற்றல் வாய்ந்தது வானொலி. வெறுமனே பிரசாரப் பண்புடன் அமையாது வாழ்க்கையுடன் ஒன்றிணைந்ததாக வானொலி இயங்குவது அவசியமானது. இவ்வாறான நிலையிலேதான் அதன் இலக்கிய ரீதியான பாதிப்பு அர்த்தமுள்ளதாக அமையும். இலங்கை வானொலி வர்த்தக சேவையின் தோற்றம் பிறிதொரு வெகுசன கலாசார அமிசமான விளம்பரங்களை அடிப்படையாகக் கொண்டது. வெறுமனே பண இலாபம் கருதி ஆரம்பிக்கப்பட்ட இச் சேவை மக்களின் வாசகருசி, மதிப்பீடுகள், சிந்தனை ஆகிய பல்வேறு கிளைகளையும் பாதிப்பதாக அமைகிறது. திரை இசைப்பாடல்களை முதன்மைப் படுத்தித் தோன்றிய இச்சேவை வெகுசனப் பண்புடன் இயங்கியதுடன் காலப்போக்கில் விளம்பர நெறியின் தத்துவங்களுக்கெல்லாம் இலக்கணமாகவும் அமைய ஆரம்பித்தது.

வானொலி கேட்போர் தொகையைப் பெருக்கச் செய்தமை இச் சேவைக்குரிய சிறப்புக்களுள் ஒன்றாகும். ஆரம்ப காலகட்டத்தில் பரந்த வாசக கூட்டத்தை வானொலி கொண்டமையவில்லை. ரான்சிஸ்ரரின் வருகையுடன், வர்த்தக சேவையின் இயக்கமுமே கிராமிய மட்டத்திற்கு வானொலிச் சாதனத்தை வேகமாக அழைத்து சென்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் வானொலி களிப்பூட்டும் பொழுதுபோக்குச் சாதனமாகவும் தகவல்பரப்பும் சாதனகமாகவும் அமையாது இலக்கிய கலாசார அறிவுச் சூழலை வழிப்படுத்தும் பண்பினதாகவும் அமைகின்றது. தொழில் நுட்ப வளர்ச்சியாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் கொள்வனவுச் சக்தி அதிகரிப்பாலும் இன்றைய நிலையில் வானொலியின் செல்வாக்கு பாரியது என்றே கூறவேண்டும். வானொலியின் கல்விச் சேவை இன்று பரந்த அடிப்படையில் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலக்கியச் சூழலை நெறிப்படுத்தும் ஆற்றல் வாய்ந்த வானொலியை மேலும் நிதானமாகப் பயன்படுத்துவது அவசியமாகும். வானொலி நடாத்தும் இலக்கிய மதிப்பீடுகள், உரைகள், சித்திரங்கள், கதையரங்கு, கவியரங்கு, நாடகங்கள் யாவும் பரந்த வாசகர் கூட்டத்தை நோக்கிச் செல்கின்றது. ஒவ்வொரு சாதனமும் தத்தமக்குரிய சிறப்பு நிலையான சூழலை வளர்த்துக் கொண்ட அதே நிலையில் ஒன்றின் பண்பு மற்றொன்றைப் பாதிக்கும் தன்மையினதாக அமைவது குறிப்பிடத்தக்கது.

எழுத்தறிவு வீதம் பலவகைச் சாதனங்களையும் ஒன்றற்கொன்று உபகாரமான முறையில் இயங்க வைக்கும் தேவையை உருவாக்கியுள்ளது.

பத்திரிகைச் செய்தியில் உள்ள விபரண நடை புனைகதை எழுத்துக்கு உதவுவதும், மேடைப்பேச்சு இலக்கியத்துள் வருதலும் திரைப்பட உத்திகள் புனைகதைக்குள் வரலும், செய்தித் தலைப்புக்கள் சிறுகதை நாவல்களுக்குத் தலைப்புகளாக வருதலும், செய்தி விவரண நடை வானொலியில் வருதலும், திரையிசைப் பாடல்கள் மெல்லிசைப் பாடல்களாக வரலும், கவிதைகள் திரைப்பாடல்களாகவும் வருதலும் இன்றைய வளர்ச்சியின் புதிய பரிமாணங்களிற் சிலவர்கும் எனப் பேராசிரியர் சிவத்தம்பி கூறியுள்ளமை ஈண்டு மனங்கொள்ளத் தக்கது.

தொலைக்காட்சி சேவையில் பயன்பாட்டை அனுபவிக்கும் சூழல் இன்னும் தோன்றவில்லை. மனிதனின் நம்பிக்கைகளையும் இயல்புகளையும், மதிப்பீடுகளையும், இனங்காட்டும் சகல சாதனங்களும் நிதானமாக இயங்குவது அல்லது இயங்க வைப்பது இலக்கிய, கலாசார அறிவியல் சூழலை நெறிப்படுத்த அவசியமானது. பேச்சு மொழியினையே முதன்மைப்படுத்துவதாகிய வானொலி சாதனத்தின் வரவு எழுத்து மொழியினை எளிமைப்படுத்தியது. கட்புலனுக்கும் நெறிப்புலனுக்கும் உரிய திரைப்படத்தின் தோற்றமும் செறிவும் வெகுசனப் பண்பு வாய்ந்த எழுத்து மொழியை மெருகூட்டும் துணைக்காரணியாக அமைந்தது. சுருங்கக் கூறின் தற்காலத் தமிழ் இலக்கியத்தின் பன்முகப்பட்ட வளர்ச்சியுடன் வெகுசன சாதனங்களின் இயக்கம் செம்புலப்பெயல் நீர்போலக் கலந்து அமைந்தமை குறிப்பிடக் கூடியதொன்று ஆகும். ❖

மதுரைப் பல்கலைக் கழகத்தில் பாடநூல்

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ. வகுப்பிற்குத் துணைப் பாட நூலாக டொமினிக் ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுதி வைக்கப்பட்டிருக்கின்றது.

கூட்டுச் சேரா இயக்கமும் 'சம — தூரம் என்ற தீங்கான தத்துவமும்

ஜி. எல். யொந்த ரெவ்ஸ்கி

கூட்டுச்சேரா இயக்கத்தின் பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் இன்று யாரும் மறுக்க முடியாது. எனவே, சில சக்திகள், இயக்கத்தை உள்ளிருந்தே உருக்குலைப்பதற்கும், அதனுடைய ஏகாதிபத்திய — எதிர்ப்புப் போக்கை ஜீவனிழக்கச் செய்வதற்கும், பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றன. அந்த முயற்சிகளில் ஒன்றுதான் 'சம - தூரம்' என்ற கேடு கெட்ட தத்துவத்தைப் பரப்புவதாகும்; அதனுடைய ஆதரவாளர்கள் அதைப் பல்வேறு வடிவங்களில் முன்வைக்க முயன்று வருகின்றனர். மேலை நாடுகளில் திட்டமிட்ட நோக்கத்துடன் பல்வகையான ஆத்திரமூட்டல்கள் செய்யப்படுகின்றன. வதந்திகள் பரப்பப்படுகின்றன, உதாரணமாக, கூட்டுச் சேரா இயக்கம் காலனியாதிக்கத்திற்கும் எதிரான போராட்டத்தைக் கைவிட்டு வருகிறதென்றும், அதை நடுநிலைமை நாடுகளின் ஒருவகை 'கிளப்' ஆக மாற்றி வருகிறதென்றும் குற்றம் சாட்டப்படுகிறது. கூட்டுச்சேரா இயக்கத்தைத் தகர்ப்பதற்காகத் தமது மூன்று உலகத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பதற்கான தமது முயற்சிகளை மாவோயிசப் பிரசாரகர்கள் கைவிட்டு விடவில்லை. கூட்டுச் சேரா நாடுகள் அனைத்தும் 'மூன்றும் உலக'த்துடன் சேர்ந்தவையாதலால், அவை சம அளவில் 'இரண்டாம் உலகை' அதாவது முதலாளித்துவ மற்றும் சோஷலிச நாடுகளையும் இவற்றை மாவோயிஸ்டுகள் வளர்ச்சியடைந்த நாடுகள் என்று அழைக்கின்றனர். குறிப்பாக, 'முதலாவது உலகை'யும் தத்துவவாதிகள் எனப்படும் இவர்களின் கருத்துப்படி இது 'மகா வல்லரசுகள்', அதாவது அமெரிக்காவையும், சோவியத் யூனியனையும் கொண்டது — எதிர்க்கின்றன என்று அவர்கள் கூறுகின்றனர்.

கூட்டுச் சேரா இயக்கத்தின் நிறுவகர்களும் தலைவர்களும் இந்த இயக்கத்தின் குறிக்கோள்களையும் கடமைகளையும் முற்றிலும் வேறு வழியில் விளக்கியுள்ளனர். ஜவஹர்லால் நேருவின் முன் முயற்சியின் பேரில் 1961 செப்டம்பரில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் பெல்கிரேட் மாநாடு ஏற்றுக்கொண்ட ஒரு பிரகடனம், இந்த நாடுகளின் பிரதான நோக்கம் சமாதானத்திற்கும், காலனியாதிக்கம் மற்றும் நிறவெறிக்கு எதிராகவும் ஒரு செயலூக்கமான போராட்டம் நடத்துவதேயாகும் என்று சுட்டிக் காட்டியது; மேலும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பிரதேசங்களினுள் எந்த வடிவத்திலாவது எதிர்ப்புரட்சியை ஏற்றுமதி செய்வதோ, தலையீடுகள் நடத்துவதோ, அல்லது படையெடுப்புகள் நடத்துவதோ உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று பிரகடனம் கோரியது.

1976 ஆகஸ்டில் கொழும்பில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் தலைவர்களது ஐந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவது மாநாட்டுக்குப் பின்னர் கடந்துள்ள மூன்றாண்டுகளின் போது, புரட்சிகர ஆப்கானிஸ்தானமும், எதியோப்பியாவும் உலகின் அரசியல் படத்தில் தோன்றியுள்ளன. ஈரான் நாட்டு மக்கள் ஷாவின் ஏகாதிபத்திய — ஆதரவு ஆட்சியைத் தூக்கி எறிந்துள்ளனர். நவீன-காலனியாதிக்கத்தை முட்டுக் கொடுத்து நிறுத்துவதற்காக ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்ட சென்ட்டோ, சியாட்டோ ராணுவ, அரசியல் கூட்டணிகள் வீழ்ச்சியடைந்தன.

வியத்நாமிய மக்கள் மீண்டும் ஐக்கியமடைந்ததினாலும் சோஷலிச வியத்நாம் குடியரசு நிறுவப்பட்டதனாலும், ஆத்திரமடைந்த சீன மேலாதிக்க விரும்பிகள், கம்பூசிய போல் பாட் — இயெங்சாரி கும்பலை வியத்நாமுக்கு எதிரான எல்லைப் போரில் தள்ளி விட்டனர். அந்த காட்டுமிராண்டித்தனமான ஆட்சியின் வீழ்ச்சியையும் கம்பூசிய மக்கள் குடியரசு உருவானதையும் தொடர்ந்து சீனா 1979 பிப்ரவரி, மார்ச்சில் வியத்நாமுக்கு எதிரான ஆக்கிரமிப்பைக் கட்டவிழ்த்து விட்டது.

அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் டெல் அவிவிலும் கெய்ரோவிலுமுள்ள அவர்களின் கையாட்களும், 1979 மார்ச் 26-ல் அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ் ஓர் இஸ்ரேலி — எகிப்திய தனி 'சமாதான ஒப்பந்தத்தை' ச் செய்து கொள்ளதன் மூலம் ஆப்கானிஸ்தானிலும், ஈரானிலும் நடைபெற்ற புரட்சிகளுக்குப் பதிலளித்தனர். இந்த ஒப்பந்தம் மத்தியகிழக்கு மற்றும் வடகிழக்கு ஆப்பிரிக்க மக்களுக்கு எதிரான ஓர் ராணுவக் கூட்டணியாக மாறி வருகிறது.

பெய்ஜிங்கும், வாஷிங்டனும் 'சம - தூரம்' என்ற இழிளான தத்துவத்தை விடாப்பிடியாகப் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ள போது, மூன்றாம் உலகு உள்ளிட்டு, உலகிலுள்ள நிலைமை இதுதான். மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் வெளிச்சத்தில், இந்தத் தத்துவத்தின் நோக்கம் கூட்டுச்சேரா இயக்கத்தை அரசியல் ரீதியில் நிராயுத பாணியாக்குவதும், பூரணமாக ஜீவனிழக்கச் செய்வதும். அதனுடைய ஏகாதிபத்திய - எதிர்ப்பு முனையை மழுங்கடிப்பதும், அதனுடைய பிரதான நேச சக்தியாகிய சோஷலிச நாடுகளிலிருந்து அதைத் தனிமைப்படுத்துவதும்தான் என்பது மிகமிகத் தெளிவாகும்.

'சம - தூரம்' என்ற கருத்து கூட்டுச்சேரா இயக்கத்தை உள்ளிருந்தே கவிழ்க்கும் நோக்கத்துடன் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. காலனியாதிக்கத்திற்கும், மேலாதிக்கவாதத்திற்கும், இனவெறிக்கும், புதிய போர் அச்சுறுத்தல்களுக்கும் எதிரான போராட்டத்தை ஒரு வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவருவதற்குத் தேவைப்படுவது ஒரு அபாயகரமான தீங்கான தத்துவம் அல்ல; மாறாக, கூட்டுச்சேரா இயக்கம் சோஷலிசக் கூட்டமைப்பு, உலகம் முழுவதிலுள்ள சகல முற்போக்கு சக்திகளின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவதே இன்றைய தேவையாகும்.

சோவியத் — சீன உறவுகள்

சோவியத் யூனியனுடன் சுமுக உறவுகளை மேற்கொள்ளச் சீனா எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி, வெளிநாட்டுத் தகவல் சாதனங்கள் நிரம்பக் குறிப்பிட்டுள்ளன. அதே சமயத்தில், அண்மையில் சீன நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பிரதமர் ஹுவா - குவா - பெங் அறிக்கை சமர்ப்பித்துப் பேசுகையில், அயல்துறைக் கொள்கையில் சீனாவின் சோவியத்— எதிர்ப்பு நிலைகளை வெளிப்படுத்தினார்.

சோவியத் யூனியன் தனது அயல்துறைக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற சீனத் தலைவர்கள் இப்போது கோருகின்றனர்.

சமாதான சகவாழ்வு பற்றிய பஞ்சசீலக் கோட்பாடுகள் குறித்துப் பீகிங் தலைவர்கள் நெடுங்காலமாக முழங்கி வருகின்றனர். அதே வேளையில், சீனப் பிரதமரின் அறிக்கையைக் கவனிக்குமிடத்து, அடுத்த தரப்பின் அரசுரிமையை மதிக்க வேண்டும் என்ற முக்கியமான பஞ்சசீலக் கோட்பாட்டை அவர்கள் காற்றில் பறக்க விடுகின்றனர் என்பது தெளிவு.

சோவியத் மக்கள் கடந்த 62 ஆண்டுகளாகச் சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தைக் கட்டிலருகின்றனர். சோவியத் அயல்துறைக் கொள்கையானது, அவர்களது விருப்பங்களையும் ஆர்வங்களையும் பிரதிபலிக்கிறது; சகல சமாதான, முற்போக்கு, ஜனநாயக சக்திகளின் நலன்களுக்கும் அது இசைவாக உள்ளது. பல்வேறு நாடுகளின் விவேகமுள்ள அரசியல்வாதிகள் அனைவராலும் அது ஆதரிக்கப்படுகிறது; அதற்குப் பீகிங்கின் அனுமதி தேவையில்லை.

சோவியத் அயல்துறைக் கொள்கையில் எந்த விதமான மாற்றத்தைப் பீகிங் விரும்புகிறது? சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24-வது, 25-வது காங்கிரசுகளில் அங்கீகரிக்கப் பெற்ற சமாதானம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்காகவும் மக்களின் சுதந்திரம் மற்றும் சுயாதீனத்திற்காகவும், மேலும் போராடுதல் என்ற வேலைத் திட்டத்தைச் சோவியத் யூனியன் நிராகரிக்க வேண்டும் என்று பீகிங் விரும்புகின்றதா? சோஷலிச நாடுகளுடன் கொண்டுள்ள சகோதர ஒத்துழைப்பையும், காலனியாதிக்கம் மற்றும் நவீன காலனியாதிக்கத்திற்கும் எதிராகப் போராடும் மக்களுடன் காட்டும் ஒருமைப்பாட்டையுப் சோவியத் யூனியன் கைவிட வேண்டும் என்று பீகிங் விரும்புகிறதா? அல்லது, பதற்றத் தணிவுக் கொள்கை நாங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும், ஆயுதப் போட்டியை நிறுத்துவதற்கும் இவ்வுலகில் சமாதானத்தை வலுப்படுத்துவதற்குமான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் கைவிட வேண்டும் என்று பீகிங் விரும்புகிறதா? அரபு மக்களின் நியாயமான லட்சியத்தை ஆதரிப்பதையும், ஆக்கிரமிப்புக்கு எதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரான போராட்டத்தில் புரட்சிகர எதியோப்பியாவை ஆதரிப்பதையும் நாங்கள் கைவிட வேண்டும் என்று பீகிங் விரும்புகிறதா? புரட்சிகர ஆப்கானிஸ்தானை நிர்க்கதியாக விட்டுவிட வேண்டும் என்று பீகிங் விரும்புகிறதா? சீனாவின் நேரிடையான ஆக்கிரமிப்புக்கு இலக்காகியுள்ள சோஷலிச வியத்நாமுக்கு நாங்கள் உதவக் கூடாது என்று பீகிங் விரும்புகிறதா? அல்லது, சீனாவுடன் உறவுகளைச் சுமுகப்படுத்துதல் என்ற உறுதியான கொள்கையை நாங்கள் பின்பற்றக் கூடாது என்று பீகிங் விரும்புகிறதா?

சோவியத் கொள்கையில் இத்தகைய மாற்றங்கள் எதுவும் ஏற்பட முடியாது; இனி மேலும் ஏற்படாது.

சோவியத் — சீன உறவுகள் சம்பந்தமான எந்தப் பிரச்னையையும் சீனிய அண்டை நேய உணர்வுடன் தீர்க்க முடியும் என்ற வியனிக் பிரஷ்னேவ் கூறியுள்ளார். ஆனால் முன் நிபந்தனைகளற்ற நேர்மையான பேச்சுவார்த்தைகள் மூலமே இது சாத்தியமாகும். ❋

பீகிங்கும் கூட்டுச் சேரா இயக்கமும்

ஏ. நிஸாமோவ்

பீகிங்கின் அயல்துறைக் கொள்கை போர்த்தந்திரத்தின் பிரதான கடமை, சீனாவை ஒரு 'மகா வல்லரசு' — இது வளர்முக நாடுகளின் மீது ஆட்சி செலுத்தி, உலகின் பிற பாகங்களுக்குத் தனது சித்தத்திற்குக் கீழ்ப்படும்படி உத்தரவிட முடியும் — ஆக்குவதற்கான சர்வதேச நிலைமைகளை உறுதிப்படுத்துவதாகவே இருந்தது. இப்போதும் இருக்கிறது. சீனாவை ராணுவ மயமாக்குவது, மனித குலத்தை ஓர் அணு ஆயுதப் போரை நோக்கிக் தள்ளுவது, அண்டை நாடுகளுக்கு எதிராக ஆக்கிரமிப்பு, ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிடையே ஆயுத மோதல்களைத் தூண்டிவிடுதல் என்ற மாவோயிசக் கொள்கைக்கு இது அடிப்படையாக உள்ளது. வியத்நாமுக்கு எதிரான தனது ஆக்கிரமிப்பு மூலமும் லாவோசுக்கும் கம்பூசிய மக்கள் குடியரசுக்கும் எதிரான அப்பட்டமான ஆத்திரமூட்டல்கள் மூலமும் சீன கூட்டுச் சேரா இயக்கம் முழுமைக்கும் எதிரான சவால் விட்டு, அதன் முன்னே அம்பலமாகி நிற்கிறது.

சீனா கடைப்பிடிக்கின்ற, ராணுவக் கூட்டணிகள் சம்பந்தமான அடிப்படைக் கருத்தமைப்புகளுக்கும், கூட்டுச்சேரா இயக்கத்தின் கருத்தமைப்புகளுக்கும் இடையே பொதுவான அம்சம் எதுவும் கிடையாது. இந்த இயக்கம் 'கூட்டணிகளுடன் கூட்டுச் சேராமை' என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது நன்கு தெரிந்ததே; ஆனால், பீகிங்கானது நேட்டோ மற்றும் ஆக்கஸ் வகைப்பட்ட ஆக்கிரமிப்புக் கூட்டணிகளை வலுப்படுத்த வேண்டுமென்ற அறைகூவல் விடுகிறது; மேலும் உண்மையில் மத்திய கிழக்கில் அமெரிக்கா, இஸ்ரேல், எகிப்து ஆகிய புதிய ராணுவ முத்தரப்புக் கூட்டணியை வரவேற்கின்றது.

காகிதப் பூக்கள்

அன்பு - ஜவஹர்ஷா

கண்ணின் மணிகளே!

இரத்தத்தின் இரத்தமே!
உடன்பிறப்புக்களே!
போன்ற சொற்கள்,
அரசியலுக்குச் சோரமானதால்
உங்களுக்குச் சூட
இதைவிட உயர்ந்த.....
பிறிதொரு வார்த்தை
உள்ளதாய் இல்லை.

இந்த ஆண்டை,
இளைய உங்களுக்காக.....
இனிதாய் கொண்டாட —
கோடியாய் கொட்டுகின்றார்,
கொடி கட்டிப் பறக்கின்றார்.

உங்கள் சுதந்திரம்.....
உங்கள் எதிர்காலம்.....
உங்களின் அறியாமை.....
உங்களுக்குச் சுபீட்சம்.....
உரிமைகள்; அபிலாஷைகள்,
இவைகள் அனைத்திற்கும்—
இவ்வாண்டில் தீர்வு தர.....
எத்தனை விளம்பரங்கள்—
அப்பப்பா... அப்பப்பா!

பிரசுரங்கள் எல்லாம்.....
உங்கள் முகங்களை,
'ஆர்ட்' பேப்பரில்.....
அழகாகக் காட்டுகின்றன,

கண்காட்சிகள் என்ன?
போட்டிகள் என்ன?
பரிசுகள் என்ன?
ஆயிரமாய் நடக்கின்றன.

வானொலி, டெலிவிஷன்
இத்தியாதி..... இத்தியாதி
தன்கடமைகளைச் செய்கின்றன:
இருந்தும் என்னை?

கண்ணின் மணிகளே!
இவ்வாண்டில்,
பயன் பெறப்போகின்ற.....
சிறுவர் கூட்டத்தில் —
உங்களைத்தான்
காணவில்லையே!

துன்பம் தோய்ந்த,
உங்கள் முகங்களில்
மகிழ்ச்சியின் ரேகைகள்.....
படரவிருக்க,
அனுதாபங்கள் . எல்லாம்
பிழையான பகிர்வால்..
திசை திரும்பியதுதான்—
உண்மைக் காரணமோ?

அந்தஸ்தில் உயர்ந்த
அவர்களின் பிள்ளைகளுக்கா,
இந்த ஆண்டை
தனியாய் ஒதுக்கினோம்?

கவர்ச்சிகள்..... சலுகைகள்
உங்கள் ஆண்டிலும்
தலை நீட்டியதால்.....
நோக்கங்கள் எல்லாம்—
உங்களைப் பொறுத்தளவில்
கனவுகளாயினவோ?

எதிலும் வெளிப்படும்
நித்திய உண்மை—
இங்கும் தெரிகிறது.
இந்த அமைப்பில்
இதுதான் நடக்கும்.

எங்கள் இதயங்களின்
ஒரே வருத்தம்.....
எங்களின் சிரட்டைகளிலா
சொகுசாக குளிர்பானத்தை
அவர்கள் குடிக்கவேண்டும்? ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊசலின் மௌனம்

'மேமன்கவி'

வெயில் நக கத்தி
உன் சதை ஓட்டைகளில்
வியர்வை குருதியை
கீறும்.

சட்டை மாற்றும்
சர்ப்ப கோலத் திரையாய்
பசிப் போர்வை
போர்த்தி — சுழட்டி
நீ — காலைகளின்
ஊர்வல தோழன்!

சாவின் சமிக்ஞை
சிரிக்கின்ற முதுமை
தூணைப் பிடித்து
பூவின் புணர்ச்சி காணும்
வண்டுகள் போல்
புலரும் பொழுது
விரிப்பிலிருந்து — உன்
உழைப்பு மணிக்கூட்டின்
ஓயாமல் ஆடும்
ஊசல் நீ!

புல்லின் — வைக்கோலின்
சுவையை அருந்தி
நுரைவழியும் காளைகளின்
நோவுப் பயணத்தால்
சாணம் மணக்கும் — உன்
சின்ன குடிசையின்
அடுப்பின் இயக்கம்!

பாரம் இழுக்காது
ஊமை விழிகளால்
காளைகள் வழங்கும்
சாபம்!
செம்மை கக்கும்
உன் மேனி பூமியில்
பூகம்பம் — அது
பிரம்பு சாட்டையில்
ரூபம் பெற்று
காளைகளின்
கனத்தத் தோலில்
குருதிச் சுவடுகள்
பதிக்கும்!

அந்தியின் ஜனனத்தில்
அசதி லயத்தால் உன்
உழைப்பு விழிகளில்
உக்கிரம் வழியும்!

இப்படி கழியும்
உன் ஈரவாழ்வில்
ஒருநாள்—
இரைச்சல் சந்தியில்
உன் காளைகளின்
இமை யோரங்களில்
மௌனக் கண்ணீர்
வடிய—
உன் மரணம்
அது—
ஓயா உழைக்கும்
உன் மேனி மணிக்கூட்டின்
உயிர் மூச்சு ஊசலின்
மௌன சமாதி!

கேள்விகள் புதுமையாக இருக்கட்டும்.— தரமானவையாக அவை அமையட்டும். உங்களது கேள்வியின் பசனை எமது பதிலுக்கு உற்சாகமூட்டட்டும்.



டொமினிக் ஜீவா

❖ மூன்று சிறுகதைத் தொகுதிகளை மாத்திரம் எழுதிய உங்களை எப்படிப் பெரிய எழுத்தாளன் என்று சொல்வது? ஏன் உங்களால் ஒரு நாவல் எழுத முடியவில்லை? மல்லிகை இதழ் தொடங்கிய பின்னர் உங்கள் படைப்பாற்றல் குறைந்து விட்டதா?

தும்பளை: பா. இரகுவரன்

புதுமைப் பித்தன் சிறுகதைகளைத்தான் எழுதினான். அவன்தான் எனக்கு முன்னோடி. என்னைப் பிரபல எழுத்தாளன் எனச் சொல்லச் சொல்லி யாரையுமே நான் வற்புறுத்துவதில்லை. அது அவரவர் இஷ்டம். மல்லிகை ஆரம்பிக்கப்பட்ட பின்னர்தான் எனது இலக்கியப் பார்வை பல் துறைகளில் விரிவடைந்துள்ளது. எனவே எனது சிருஷ்டிகள் பொலிவும் வனப்பும் ஆழமும் பெற்றுத் திகழ்வதற்கான பசளையை நான் இந்த அனுபவங்களில் இருந்துதான் கிரகித்துக் கொள்ளுகின்றேன். எந்தப் பிரமாண்டமான தனி மரமும் தோப்பென்று அழைக்கப்படுவதில்லை; நான் பிரமாண்டமாக வளருவதல்ல இங்கு முக்கியம். ஓர் இலக்கியத் தோப்பை உருவாக்க எனது சகல உழைப்புச் சக்திகளையும் கொண்டு தினசரி செயலாற்றி வருகிறேன். இந்த உழைப்பே ஒரு சமுதாய நாவலுக்கான செயல்பாடுதான். ஓர் எழுத்தாளனின் எழுத்தை மாத்திரம் வைத்து எடை போடாதீர்கள். அவனது காலத்தில் அவன் சமுதாயத்தின்மீது தனது முத்திரையைப் பதித்துள்ளானா இல்லையா என்பதை வைத்தே அவனது திறமையைக் கணிப்பீடு செய்ய வேண்டும். என்னைப் பொறுத்தவரை ஒவ்வொரு மல்லிகை இதழ்களுமே எனது சிருஷ்டிகள்தான்!

❖ சமீபத்தில் சென்னைக்குச் சென்றிருந்தீர்களே, எனது அபிமான எழுத்தாளர் திருமதி ராஜம் கிருஷ்ணனைச் சந்தித்தீர்களா?

கரவெட்டி: மா. இந்திரா

இரண்டு தடவைகள் சந்தித்தேன். முதல் தடவை 'சோவியத் வுமின்' என்ற மாத சஞ்சிகையின் ஆசிரியருக்குச் சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஒரு வரவேற்பு உபசாரம் நடந்தது. அதில் பேச்சாளராகக் கலந்துகொள்ள வந்திருந்த போது அவரைச் சந்தித்து மல்லிகை மலரை அவரிடம் கொடுத்தேன். திரு. சிவத்தம்பி அவர்கள் அவரது 'வீடு' நாவல் பற்றி எழுதிய விமர்சனக் கட்டுரையை அதில் வெளியிட்டுள்ளதாக அவரிடம் கூறினேன். அவருக்கு மெத்தப் பெரிய மகிழ்ச்சி. அடுத்து நூலக மாடியில் எனக்கு நடந்த வரவேற்புக் கூட்டத்தில் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. சில மணித்துளிகள்தான் அவருடன் உரையாட முடிந்தது. இருந்தாலும் அவரைப் பற்றி எனது மனதிலுள்ள உணர்வுகளை நேரில் அவரிடமே சொல்லி வைத்தேன்.

❖ மல்லிகை மலர் பார்த்தேன். இந்த ஆண்டு அட்டைப் படம் மிகவும் உயிர்த் துடிப்புள்ளதாக அமைந்தது. இந்த அட்டைப் படத்திற்கு உள்ளே விளக்கம் போடவில்லையே, ஏன்?

கோப்பாய். த. சிவபாலன்

ஓவியர் ரமணிக்கே அத்தனை புகழும் சேரவேண்டும், ஓவியம் உருவாக ஒத்துழைத்தவர் நண்பர் மௌனகுரு. தமிழகத்தில் கூடப் பலர் அட்டைப் படத்தைப் பற்றித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். ஓர் அருமையான புதுப் போக்குள்ள ஓவியரைப் பெற்றிருப்பதாகப் பலரும் நம்மைப் பாராட்டினர். எனது இரண்டு படைப்புக்கள் தயாராகின்றன. அவற்றிற்கு ரமணிதான் அட்டைப் படம் வரைய வேண்டும் எனச் சென்னைப் பதிப்பகத்தினரே கேட்டுக் கொண்டனர். உண்மையிலேயே எனக்குப் பெருமையாக இருந்தது; இந்த ஓவியரைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே இனங்கண்டு அட்டைப் படத்திலும் இவரது உருவத்தைப் பொறித்ததை அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். அப் படத்திற்கு விளக்கம் போட்டால் அதன் அர்த்தமும் ஆழமும் கெட்டுவிடும். எனவே புரிந்து கொள்ளுங்கள்.

❖ தமிழகத்திற்குச் சமீபத்தில் சென்றிருந்தீர்களே, அந்த அனுபவத்தைச் சென்ற தடவை போலத் தொடர் கட்டுரையாக எழுதுவீர்களா?

எஸ். எம். கருணாநிதி உரும்பராய்.

அப்படி எழுதும் உத்தேசம் இல்லை. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அது பற்றி இலக்கிய நண்பர்களுடன் உரையாடலாம் என நம்புகின்றேன். சென்ற தடவையை விட, இந்த முறை எனது இலக்கியத் தொடர்பு பரந்துபட்ட, ஆழமான ஓர் அனுபவமாக அமைந்தது. ஏராளமான இலக்கிய நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. பல ஊர்களுக்குப் போகும் நிலையும் பல இலக்கியக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பமும் பல பத்திரிகைகளுக்கு எனது கருத்துக்களைச் சொல்லிப் புரிந்து கொள்ளும் நல்லிணக்கமான தன்மையும் ஏற்பட்டது

அப்படி எதாவது அறிய வேண்டுமானால் தூண்டிலுக்கு எழுதுங்கள்.

❖ மல்லிகையில் 'தண்ணீரும் கண்ணீரும்', 'பாதுகை', 'சாலையின் திருப்பம்' போன்ற தொகுதிகளுக்கு விளம்பரம் போட்டிருந்தீர்கள், அவர்களுடைய கடைகளில் கேட்டால் வரவில்லையே எனக் கையை விரிக்கிறார்கள். அத் தொகுதிகளைப் பெறும் மார்க்கமென்ன?

கொழும்பு-6 எஸ். குணதாஸன்

இத் தொகுதிகள் உங்களுக்கு அத்தியாவசியம்தேவையென்றால் தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

❖ புதுக் கவிஞர்களில் சிலர் மரணம், வீழ்ச்சி, நம்பிக்கையின்மை, வறட்சி, தோல்வி மனப்பான்மை, காதல் வீழ்ச்சி பற்றியே பாடுகின்றனரே, இவர்களை நீங்கள் புதுக்கவிஞர்கள் என ஒத்துக் கொள்ளுகின்றீர்களா?

கைதடி. ஆர். குலேந்திரன்

புதுக் கவிதைக்காரர்கள் எல்லாரும் இப்படிப் பட்டவர்களல்ல. நீங்கள் குறிப்பிட்டவர்களைப் போன்றவர்கள் இங்கும் இருக்கின்றனர். இவர்களுடன் ஒரு சில மணி நேரங்கள் சம்பாஷித்தாலே எங்கள் தலைகளும் பழுதாகிவிடும். இவர்களைத் தவிர, ஆரோக்கியமான பலர் புதுக் கவிதை எழுதுகின்றனர். இப்படியானவர்களின் கவிதைகளைப் படித்துப் பாருங்கள். உங்களுடைய கணிப்பீடு மாறக் கூடும்.

❖ இலக்கியத்தில் பெண்களை வெறும் விற்பனவுப் பண்டமாகவும் விளம்பரப் பொருளாகவும் பாவித்து வருகின்றனரே, இதைப்பற்றி உங்களது கருத்து என்ன?

மானிப்பாய். எஸ். உஷாராணி

நாறிப்போன சமூக அமைப்பில் பெண்மை மட்டுமல்ல, மனித உயிர்களே வெறும் விற்பனவுப் பண்டங்கள்தான். சமீப காலமாகப் பெண்களின் கவர்ச்சியை மையமாக வைத்து இலக்கியம் படைக்கப்படுவது சீரழிவின் உச்சியைக் காட்டுகின்றது. இதில் வேதனை என்னவென்றால் இந்தப் பெண்மைச் சீரழிவைப் பெண்களே முன் நின்று சீரழிப்பதுதான். புதிய தலைமுறையினர் இச் சீரழிவை எதிர்த்து மிக வலிமையாகப் போராட வேண்டும். இலக்கியத்தில் பெண்மையை அலங்கோலப் படுத்தினால் சகல ஜனநாயக உள்ளம் படைத்தவர்களும் அதற்கெதிராக ஒன்றுபட்டு இயங்க வேண்டும். அப்பொழுதுதான் இப்படியான சீரழிவுக் கருத்துக்களை மட்டந்தட்ட முடியும்.

❖ இம் முறையும் உங்களது பழைய நண்பர் ஜெயகாந்தனைச் சந்தித்தீர்களா? அவரைப் பற்றிய உங்களது அபிப்பிராயம் என்ன?

மல்லாகம். ம. ராகுலன்

சென்னையில் ஒன்பது நாட்கள் தங்கினேன். நான்கு தடவைகள் சந்தித்தேன். ஒரு பெரிய விருந்தே தந்தார். இடைக் காலத்தில் நிலை தளம்பின ஜெயகாந்தன் இடைக் காலத்தவரே. இன்று மிக உறுதி வாய்ந்த நிலை எடுத்துள்ள 'கல்பனா' ஜெயகாந்தனையே பார்க்கின்றேன். வேறெந்தக் காலங்களையும் விட இன்று அவர் முற்போக்கு இயக்கத்திற்கு மிக நெருக்கமானவராகவே காட்சி தருகின்றார். மனம் விட்டுப் பல விவகாரங்கள்பற்றிப் பேசினோம்; பழகினோம்.

❖ காவலூர் ஜெகநாதன் சிறுகதையை ஏன் பிரசுரித்தீர்கள்? ஏற்கனவே வேறு சஞ்சிகையில் வெளிவந்ததல்லவா? அது பற்றி அறியத் தாருங்கள்.

அரியாலை. சி. எச். பிஹேமினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைக்கு ஏற்பட்ட தற் செயலான விபத்து அது. தவறுக்குரிய முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். வருங்காலத்தில் இப்படியான தவறுகள் நடைபெற மாட்டாது என உறுதி கூறுகின்றேன். இது பற்றி விவரமாகக் கூற முடியாது. இது ஒரு சின்ன விஷயம்;

❖ நீங்கள் சமீபத்தில் படித்த நல்ல நாவல் ஒன்றைப் பற்றிக் கூற முடியுமா?

வசாவிளான். ம. நரராசன்

சு. சமுத்திரம் எழுதிச் சமீபத்தில் வெளிவந்த 'ஒரு கோட்டுக்கு வெளியே' என்ற நாவலைச் சமீபத்தில் படித்தேன். பிரமித்துப் போய் விட்டேன். அருமையான நாவல். புதிய களம்; புதிய கோணம்; புதிய பாத்திர வார்ப்புக்கள். சமுத்திரம் அவர்களை நான் சென்னையில் சந்திப்பது வழக்கம். அவர் வளர்ந்து வரும் எழுத்தாளர் என்ற மன உணர்வுடனேயே அவருடன் பழகினேன். இந்த நாவலைப் படித்ததின் பின்னர் அவரைப் பற்றி மிக மரியாதையான உணர்வுடனேயே எனது மனதில் நினைவு கூருகின்றேன். அவசியம் இலக்கிய நண்பர்கள் படித்துப் பார்க்க வேண்டிய தரமான நாவல் இது.

❖ உங்களது தமிழகப் பிரயாணம் எப்படி? இலக்கிய நண்பர்களைச் சந்தித்தீர்களா? அவர்களுடன் கலந்துரையாடிய சுவையான சம்பவங்களை மல்லிகை வாசகர்களுக்கு அறியத் தருவீர்களா?

பதுளை: ச. தேவதாசன்

சென்ற ஆண்டு தமிழகத்திற்குச் சென்றதை விட, இம்முறை பல இலக்கிய நண்பர்களைப் பல பிரதேசங்களில் சந்திக்க முடிந்தது. சுவையான தகவல்கள் கிடைத்தன. தொடர்ந்து மல்லிகையில் எழுதும் உத்தேசம் இல்லை. எனது சொந்த அனுபவத்திற்குப் பயனுள்ள பிரயாணமாக அமைந்தது இப் பிரயாணம்.

❖ 'சாவி' தீபாவளி இதழில் தி. ஜானகிராமனைப் பற்றி ஜெயகாந்தன் கூறிய பேட்டிக் கட்டுரைகளைப் படித்துப் பார்த்தீர்களா? தி. ஜானகிராமனைப் பற்றி உங்களது கருத்து என்ன?

கொழும்பு - 2. கி. சதானந்தன்

ஜெயகாந்தன் பேட்டி படித்துப் பார்த்தேன். தி. ஜாவின் சமீபத்தைய ரூபாய்ப் படைப்பான 'அடி' நாவலையும் படித்துப் பார்த்தேன். மத்திய தர வர்க்கத்து மத்திய தர வயதுள்ள மனிதச் சபலத்திற்கு ஜானகிராமன் பல நாவல்களில் உயிர் கொடுத்து வருவதையும் என்னால் உணராமல் இருக்க முடியவில்லை. இருந்தாலும் ஜானகிராமன் நாவலாசிரியராக என் மனதைக் கவர்ந்தது போல வேறெந்தத் தமிழ் நாவலாசிரியரும் எனது உள்ளத்தில் இடம் கொள்ளவில்லை. அந்தப் பாத்திர சிருஷ்டி, அந்த வர்ணிப்பு, அந்தச் சம்பவ வார்ப்புகள்..... அது ஜானகிராமனுக்கே கைவந்த கலை. குறைபாடுகளைச் சுட்டிச் சொல்வது விமர்சனச் சுலபம். ஆனால் அவரைப் போல தஞ்சைத் தரணி மண்ணையும் நதியையும் புல்லையும் பூண்டையும் உயிர்ப்பிக்க வைத்து நாவல் படைப்பது மகா சிரமம். தமிழில் சாகாவரம் பெற்ற மாபெரும் நாவலொன்றைப் படைக்க முடியுமானால் அது தி. ஜாவால் தான் முடியும் என்பதை இன்றும் உறுதியாக நம்புபவன் நான்.

தொழில் நுட்பப் பயிற்சிகள்

National Institutes

57, பங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.

வெல்டிங், இலெக்ரிக் வயரிங், P. M. G., ரேடியோ, C. E. I. City & Guilds, Building Technology

இலங்கை மக்களின் நம்பிக்கையின் சின்னம் 'அண்ணா'

எமது அண்ணா தயாரிப்புக்களான

அண்ணா பற்பொடி
அண்ணா தேயிலை
அண்ணா பத்திகள்

இவற்றின்

வெற்றுப் பைக்கட்டுகளைக் கொடுத்து இனாம் பொருட்களைப் பெறுவதுடன் புத்தாண்டு கலண்டரையும் அடுத்த மாதத்திலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mallikai OCTOBER 1979

Registered as a Newspaper in Sri Lanka

SIVAYOGA Jewellers

JEWELLERS & GEM MERCHANTS

54, SEA STREET, COLOMBO-11

உறுதிக்கும், உத்தரவாதத்திற்கும்
நேர்மையான ஸ்தாபனம்

சிவயோக நகை மாளிகை

ஓடர் நகைகள் குறித்த நேரத்தில்
சிறந்த முறையில் செய்பவர்கள்

சிவயோக
நகை மாளிகை

54, செட்டியார் தெரு,
கொழும்பு-11

இப்பத்திரிகை 234B, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும் அதிபரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும் அட்டை பா. மா. பு. நோ. கூ. ச. கூட்டுறவு அச்சகத்திலும் அச்சிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org